சத்தியவேத

# பாதுகாவலன்

Telegram "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு மாசிமாதம் 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 6-ம் இலக்கம்



## திருச்சபையைப் பாதுகாக்கத் துணிவுடன் முன்வாருங்கள்

### மாத்தளைக் கத்தோலிக்க சங்கத்திற்கு கண்டி மேற்றிராணியாரின் அறிவுரை

"திருச்சபை தாக்கப்படும் தருணங்களில் அதை உங்கள் எழுத்துவன்மையினாலும், மேடைப் பேச்சுகளினாலும் பாதுகாக்க நீங்கள் துணிவுடன் முன்வரவேண்டும். தேவன் உங்களுக்குத் தந்த ஆற்றல்களை நீங்கள் நன்கு பயன்படுத்தவேண்டும்."

இவ்வாறு கண்டி மேற்றிராணியாராகிய அதி வந். லீயோ நானயக்கார, ஓ. எஸ். பி. ஆண்டகை அவர்கள் மாத்தளைக் கத்தோலிக்க சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சென்ற மாதம் 21-ந் திகதி சொற்பொழிவாற்றியபொழுது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது, "எழுத்து வன்மையுள்ளவர்கள் 'மெஸெஞ்சர்', பாதுகாவலன், மேற்றிராசனச்சஞ்சிகைபோன்ற கத்தோலிக்கப் பிரசுரங்களுக்கு விடயதானம் செய்தல்வேண்டும். வழிபாட்டு இடங்கள்பற்றிய மசோதா எங்கள் அடிப்படை உரிமைகளைத் தாக்குகின்றது. ஆகையால், கத்தோலிக்கர் ஒன்றுகத்திரண்டு அதை வன்மையாகக் கண்டித்து, தங்கள் எதிர்ப்பைக் காட்டவேண்டும்."

விசாரணைப்பங்கின் கத்தோலிக்க சங்கத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டு, அது கத்தோலிக்க சேவைக்கும் மற்றும் வேதபோதக தொண்டுகளுக்கும் உகந்த ஓர் கருவியாய் இருப்பதால் அதை விசுவாசிகள் அதிகம் ஆதரிக்க வேண்டும் எனக் கூறினர். ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும் கத்தோலிக்க சங்கம் நிறுவப்பட்டுச் செயலாற்றினால் தான் மேற்றிராசனக் கத்தோலிக்கசங்கம் இயங்க முடியும். மேற்றிராசனக் கத்தோலிக்க சங்கங்கள் இயங்கினால் தான் அகில இலங்கைக் கத்தோலிக்கசங்கம் தொழிற்படமுடியும். இச்சங்கம் ஒன்றே கத்தோலிக்கரின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடியதாகும். ஆகவே கத்தோலிக்கரெல்லோரும் விசாரணைப் பங்குச் சங்கங்களில் சேர்ந்து தேசிய கத்தோலிக்க சங்கத்துக்கு உறுதியும், பலமும் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

மேற்றிராணி ஆண்டவர் அவர்களின் சொற்பொழிவின் பின் மாத்தளைக் கத்தோலிக்க சங்கத்தின் ஞானத்தலைவரான அதி வண. லூசியன் பெரேரா சுவாமிகள் அச்சங்கத்தை அழிக்கக் கூடிய 10 காரணங்களைக் குறிப்பிட்டு, சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர்களைத் தெரிவுசெய்யும் பொழுது, அவைகளை அங்கத்தவர்கள் மனதில் வைத்திருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அதன்பின் உத்தியோகஸ்தர்களின் தெரிவு நடைபெற்றது. திரு. பசில் ஆர். ஜீ. விஜயக்கோன் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## மனந்திருப்புதல் இயக்கத்தில்

### இல்லற உபதேசிமார்

மாசி 11-ந் தேதி தொடக்கம் லிவப்பூல் மேற்றிராசனத்தில் 40 இடங்களில் இல்லற உபதேசிமார் மனம்திருப்புதல் இயக்கத்தில் உதவிசெய்ய விருக்கின்றனர். இப்பொழுது 12 ஆடவர் பயிற்சி பெற்று, பத்திரம் பெற்றிருக்கின்றனர். இப்பயிற்சியை வண. யோண் கலகன் சுவாமியார் நடத்தினர்.

கத்தோலிக்க போதகசங்கத்தின் முன்னைநாள் தலைவரும், ஷெ மேற்றிராசன தகவல்நிலையத்தின் தற்போதைய தலைவருமான பிரான்சிஸ் றிப்பிலி சுவாமியார் இவ்வியக்கத்தை நடாத்துகின்றார்.

விசுவாச உண்மைகளைத் தெளிவாய் அறியவும், பிறருக்கு விளக்கவும் ஆற்றல் உடையவர்என எண்ணும் கத்தோலிக்கர் யாவரும் பயிற்சிக்கு ஏற்றுக்கொள்ளப்படுவர். வாரத்தில் ஒருமுறையாக 12 மாதங்களுக்கு பயிற்சி வகுப்பு நடாத்தப்படும். பின்பு தராதரப்பத்திரம் பெற்று, தம் பங்குக் குருவானவருக்கு தமது சேவையை அர்ப்பணிப்பர். அங்கு வேலையில்லாவிட்டால் வேறு பங்குகளுக்கு அனுப்பப்படுவர்.

குருமார், மரியாயின்சேனை அங்கத்தவர், அர்ச். வின்சென்ற் தி பவுல் சபையினர் போன்றவர்கள் வீடுகள்தோறும்சென்று கத்தோலிக்கரை இவ்வியக்கத்தில் ஈடுபடும்படி கேட்கவிருக்கின்றனர். நோயாளரும் இவ்வியக்கத்தில் சேர்ந்து, அது சித்தியடையும்படி தமது செபத்தையும் துன்பத்தையும் அர்ப்பணிக்கும்படி கேட்கப் படுவர்.

## மூன்றுநாடுகளுக்குப் பாப்புவின் தரும உதவி

ஒல்லாந்தில் நடந்த புகையிரத விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அருளப்ப பாப்பரசர் தமது அனுதாபத்தைத் தெரிவித்தார். உயிர் தப்பியவர்களில் அதிகம் வறியவர்களுக்கும், உயிரிழந்தவரின் குடும்பங்களுக்கும் பண உதவியளித்து இருக்கிறார்.

பேருநாட்டில் பூகம்பத்தின் விளைவாய் மலைசரிந்து ஏற்பட்ட விபத்தில் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு அனுதாபந் தெரிவித்ததுமன்றி பணஉதவியும் செய்துள்ளார். யூகோசிலவியாவில் நடந்த பூமியதிர்ச்சியில் ஏற்பட்ட சேதத்துக்ாகவும் பண உதவி யளித்திருக்கிறார்.

## ஆங்கிளிக்கன்சபைக் குருமார்

### பாப்பரசரைப் பேட்டி காண்பர்

திருச்சிலுவைக் கழகத்தைச் சேர்ந்த ஆங்கிளிக்கன் சபைக் குருமாரின் பிரதிநிதிகள் பாப்பரசரைப் பேட்டிகாண றோமாபுரிக்குச் செல்லவிருக்கின்றனர். இது குறித்து அவர்கள் கூறியதாவது: "நாங்கள் வேதசாஸ்திரிகளென்ற முறையிலல்ல, சாதாரண பங்குக் குரவரென்ற கோதாவில் எங்கள் நாட்டில் கிறிஸ்தவ ஒற்றுமையை உருவாக்குவதற்கு நாம் செய்யக்கூடியது என்ன என்பதை ஆராயும்பொருட்டே பாப்பானவரைச் சந்திக்கப் போகின்றோம். எங்களுடைய சந்திப்பின்பயனாக ஆச்சரியம் உண்டு பண்ணக்கூடிய மாற்றங்கள் உடனே ஏற்படுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் எங்களைப்பற்றி றோமன் கத்தோலிக்கர் மத்தியில் நிலவிவரும் தப்பபிப்பிராயங்கள் மாறி, அவர்களோடு நாம் சேர்ந்து செபிப்பதற்கும் மத ஆராய்ச்சிகள் நடத்துவதற்கும், ஒத்துழைப்பதற்கும் இச்சந்திப்பு வழிகோலுமென்று நம்புகிறோம்.

"கிறிஸ்தவ ஒற்றுமையை, புரொட்டெஸ்தாந்தர் கத்தோலிக்க சபைக்குத் திரும்பிவருவதாகவோ, அன்றேல் கத்தோலிக்கர் புரொட்டெஸ்தாந்தருக்கு விட்டுக்கொடுப்பதாகவோ, நாம் கருதவில்லை. ஒற்றுமைக்கு எந்தப் பிரிவினர் கூடிய அடிகள் எடுத்துவைக்க வேண்டுமென்று நாம் கணக்குப்பார்க்கப் போவதுமில்லை. இரு சாராரும் அன்பினால் தூண்டப்பட்டு உண்மையைக் கண்டறிய வேண்டுமென்ற ஏக நோக்கத்துடனேயே உழைக்கவேண்டும்."

கிறிஸ்தவ ஒற்றுமைக்காக இங்கிலாந்தில் உழைக்கும் ஆங்கிளிக்கன் சபையைச் சேர்ந்த கழகங்களுள் திருச்சிலுவைக் கழகமே மிகத் தொன்மை வாய்ந்தது. அது இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பெற்றது. அதில் 150 க்கு அதிகமான ஆங்கிளிக்கன் சபைக் குருமார் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## லொயோலா கல்லூரியில் அதிமேற்றிராணி ஆண்டவருக்கு மகத்தான வரவேற்பு

சென்றமாத இறுதியில் கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாவந். தோமாஸ்கூறே ஆண்டவர் அவர்கள் நீர்கொழும்பில் உள்ள லொயோலாஎன்னும் தனித்தியங்கும் கல்லூரிக்கு ஆய்ருக்குரிய விசாரணையின்காரணமாக விஜயம்செய்தபொழுது கல்லூரிஅதிபரும், ஆசிரியர்களும், மாணவர்களும் அவருக்குக் குதூகலமான வரவேற்பளித்தனர். மூன்றுமாணவர்கள் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் முறையே சொற்பொழிவாற்றி அதிமேற்றிராணிஆண்டவருக்கு மாணவரின் வரவேற்பையும், வணக்கத்தையும், அன்பையும், பணிவையும் தெரிவித்துநின்றனர். கல்லூரிஅதிபராகிய திரு. எஸ். வீ. வொன்ஸேகா அவர்கள் அதிமேற்றிராணிஆண்டவரை வரவேற்றுப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார். "உண்மையான, உன்னதமானகருத்தில் தாங்கள் எங்கள்ஆயராகவே இருக்கிறீர்கள். கஷ்டங்கள் நிறைந்த இந்தக்காலத்தில் ஆயருக்குரிய தங்கள்செங்கோலையே எங்கள் தஞ்சமாக நாங்கள் நம்பியிருக்கின்றோம். தங்களுடைய ஞானஒளியும், செல்வாக்கும், வழிகாட்டுதலும், உதவியும் எங்கள்மத்தியில் நீடித்திருப்பதாக." ஈற்றில், கல்லூரிஅதிபர் அதிமேற்றிராணி ஆண்டவருக்குக் கல்லூரி ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் அன்பையும, பிரமாணிக்கத்தையும் தெரிவித்துத் தமது சொற்பொழிவை முடித்தார்.

அதிமேற்றிராணி ஆண்டவர்அவர்கள் வேதப்பயிற்சியினதும், ஒழுக்கப்பயிற்சியினதும் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டி, அந்தஇடத்தில் ஓர்உண்மைக் கத்தோலிக்கசமூகத்தை உருவாக்குவதற்கு லொயோலாக்கல்லூரி அதிக துணைபுரியுமெனத் தாம்நம்புவதாகக் குறிப்பிட்டு ஆசிரியர்களையும், மாணவர்களையும் நாளாந்தமுயற்சிகளில் ஊக்கமெடுத்துவரும்படி பெரிதும் உற்சாகப்படுத்தினர். அதிமேற்றிராணி ஆண்டவர்அவர்கட்குக் கல்லூரியின் உபதலைவரான திரு. ஏ. ஜே. வொன்ஸேக்கா அவர்களால் நன்றியுரை கூறப்பட்டது. பாப்பரசர் கீதத்துடன் வரவேற்புக் கொண்டாட்டம் முடிவெய்தியது.

---

## சிலாபத்தில் ஞானோபதேச உபகரணக் கண்காட்சி

அண்மையில் சிலாபத்திலுள்ள சென்மேரிஸ் கல்லூரியில் ஞானோபதேச உபகரணக் கண்காட்சியொன்று மிகச் சித்திகரமாக நடந்தேறியது. சிலாப வட்டாரத்தைச்சேர்ந்த சகலவிசாரணைப்பங்குகளும், ஸ்தாபனங்களும் இப்பொருட்காட்சியில் மெச்சத்தக்க ஆர்வத்துடன் கலந்துகொண்டன. பெருந்தொகையானபடங்கள், மாதிரிஉருவங்கள், அட்டவணைகள்முதலிய ஞானோபதேச உபகரணங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இக்கண்காட்சியைச் சிலாபமேற்றிராசனத்தின் பிரதமகுருவாகிய அதிவண. மொன்சிங்கோர் மைக்கல் பெரேரா அவர்கள் திறந்துவைத்தார்கள்.

சிலாபவட்டாரத் தலைமைக்குருவர் அதிவண. ரொபெட் பெனாண்டோ சுவாமிகள் பிரதமகுருவரை வரவேற்றுச் சொற்பொழிவாற்றிய பொழுது அதிவந். சிலாபமேற்றிராணி ஆண்டவர் அவர்கள் சுகயீனகாரணத்தால் அக்கண்காட்சியைத் திறந்துவைக்கமுடியாமல் போனதற்குத் தமது துக்கத்தைத் தெரிவித்து, அக்கண்காட்சியை உருவாக்குவதற்கு உதவிசெய்த விசாரணைப்பங்குகட்கும், ஸ்தாபனங்கட்கும் தமதுநன்றியைத் தெரிவித்தார்.

அதிவண. பிரதமகுரவர் பேசிய பொழுது: திருச்சபையின் விரோதிகள் கத்தோலிக்க விசுவாசத்தைப் பூண்டோடு அழித்துவிடக் கங்கணங் கட்டி நிற்கும் இந்தக்காலத்தில், கத்தோலிக்க மக்களின்விசுவாசத்தை உறுதிப்படுத்தி வளர்ப்பதற்கு மிகவும்உதவக்கூடிய இக் கண்காட்சியை ஆயத்தப்படுத்தியவர்கட்குத் தமதுபாராட்டைத் தெரிவித்தார்.

அப்போஸ்தலர்களுடைய விசுவாசப்பிரமாணத்தின் பிரிவுகளைவிளக்குவதற்கு ஏதுவான படங்களும், மாதிரி உருவங்களும், அட்டவணைகளும் ஒழுங்காகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவையுடன் பரிசுத்த கன்னிமரியம்மாளைப்பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்க தரிசனங்களையும், அவவுடைய சீவியசரிதையையும், அவவுடைய காட்சிகளையும் விளக்கும்படங்களும், பலகையில் வெட்டப்பட்ட மாதிரி உருவங்களும் கண்காட்சியில் இடம்பெற்றன. இன்னும் யேசுக்கிறிஸ்துநாதரைப்பற்றிய பழையஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களும், அவருடையவருகைக்கு ஆயத்தப்படுத்திய முற்குறிகளும், அவருடைய சீவியசரிதையும், பாடுகளும், மரணமும், உத்தானமும், ஆரோகணமும் தகுந்த உபகரணங்கள்மூலம் விளக்கிக் காட்டப்பட்டிருந்தன.

மேற்படி ஞானோபதேச உபகரணங்கள் இரண்டுதினங்களாகக் காட்சிக்குத் திறந்துவைக்கப்பட்டிருந்தன. கண்காட்சியின் கடைசிநாளில் சென்மேரிஸ் கல்லூரிமண்டபத்தில் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்று அதைச்சிறப்பித்தன. ஈற்றில் சென்றவருட ஞானோபதேசப் பரீட்சையில் முதலிடம்பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

---

## ஊர்காவற்றுறையில் அர்ச். டோன்போஸ்கோ கழக ஆண்டுவிழா

ஊர்காவற்றுறை, பூசைப்பரிசாரகர்களின் விளையாட்டுக் கழகமான புனித டொன்பொஸ்கோக் கழகத்தின் வருடாந்தக்கூட்டம் அக்கழகத்தின் பாதுகாவலரான புனித டொன்பொஸ்கோவின் திருநாளான தைமாதம் 31-ந் திகதி புனித அந்தோனியார் தேவாலயத்தின் குருமனையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. வருடந்தோறும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் இவ்விழா இத்தடவையும் இக்கூட்டத்தின் பழைய அங்கத்தினர்களின்சமுகத்தில் கொண்டாடப்பட்டது.

ஞானத்தலைவரான ஊர்காவற்றுறை மீசாமின் கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியார் அவர்களின் தலைமையில் கூட்டம் செபத்துடன் ஆரம்பமாயிற்று.

முதலாவதாக புனித டொன்பொஸ்கோக் கழகக் காரியதரிசி செல்வன் எஸ். ஜே. ராஜநாதனால் புனித டொன்பொஸ்கோவின் சீவிய வரலாற்றின் சுருக்கம் வாசிக்கப்பட்டது. பின்னர் அக்கூட்டத்தின் தலைவர் எஸ். இருதயதாசன் அவர்களின் வேண்டுகோளின்படி கி. ஸ்ரனிஸ்லாஸ், பிலுப்புப்பிள்ளை, எஸ். ஆர். ராஜபாலன் ஆகியோர் சிற்றுரையாற்றினர். [illegible] பரிமாறப்பட்டன.

அதன்பின் முன்னாள் ஆசிரியரும், தற்போது புனித அந்தோனியார் கல்லூரியின் வாசிகசாலை நிர்வாகியுமான திரு. அப்புறேஸ் அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

ஈற்றில் கட்டளைக்குருவானவர் சிற்றுரையாற்றும்பொழுது, "இக்கூட்டம் மேய்ப்பனில்லாத ஆடுகள் போலிருந்த சிறுவர்களை ஒன்றுசேர்க்கவே ஏற்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இக்கூட்டம் வளர்பிறை போன்று வளர்ந்து வந்திருக்கிறது. இக்கூட்டத்திலிருந்து ஒருசிலர் குருபதவியைத் தேடிக் குருமாணவர் பயிற்சிமடத்திற்குச் சென்றிருக்கின்றனர்" என்றார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: "இக்கூட்டம் ஆரம்பமாகி ஏறக்குறைய எட்டுவருடங்கள் கடந்துவிட்டன. அதுவரையிலும் இக்கூட்டத்திலிருந்து விலகிய பழைய மாணவர்கள் தாங்கள் முன்னொருகாலம் இக்கழகத்தில் சேர்ந்திருந்தனர் என்பதை மறக்காது இவ்விழாவிற்குச் சமுகம் தந்ததற்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்". அத்துடன் கூட்டம் இனிதே கலைந்தது.

— நிருபர்

---

## புளியடிக்குடாவில் அர்ச். லூர்துநாயகி திருப்பதித் திருநாள்

மட்டக்களப்பு, பெரிய உப்போடை வார்ரேட் அருகாமையில் அழகு கொழித்து அன்னையின் திரு உருவத்தை அண்ணார்ந்து பார்க்க வைத்து ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தவைக்கும் சிறிய கெபி ஒன்று உண்டு. கருங்கற்களாற் செதுக்கப்பட்ட இக் கெபியானது பார்ப்பதற்குச் சிறிய மலைக்குகைபோன்றிருந்தாலும் திறக்கப்பட்ட சிறிய பலிபீடமொன்றையும் உள்ளடக்கிய சக்கிறிஸ்தி அலறையையும், இரண்டிற்கும்மேல் நீண்டு ஒடுங்கிய மேல்வீட்டறையொன்றையும் கொண்டதாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்ட லூர்து நாயகியின் அன்பர் பலரின் பேருதவிகளாலும் வண. கட்டளைக்குருவானவரின் பெரும்முயற்சியாலும் 1958-ம் ஆண்டு மார்கழி 6-ந் திகதி கட்டி முடிவுற்று, அபிஷேகம்செய்யப்பட்ட இத் திருப்பதியானது ஆயிரக்கணக்கான பக்தர்கள் திவ்வியபலிபூசை, ஆராதனைகளைக் காணத்தக்கவாறு இயற்கையாகவே வெண்மணல் பரந்த முற்றத்தையும் கொண்டதாய் அமைந்துள்ளது. இவ்வருட அன்னையின் திருநாளைக் கொண்டாட 16-1-62-ல் கொடியேற்றத்துடன் நொவனை ஆரம்பமானது. 2-2-62-ல் கெபி இருமருங்கும் 14 சிலுவைகள் நாட்டப்பட்டுப் பாப்பானவரின் சுகிர்த கருத்துக்கள் நிறைவேறும்படியாக நொவனை ஆசீர்வாதத்திற்குமுன் சிலுவைப்பாதையும் நடைபெற்றுவருகிறது. 8-ம், 9-ம், 10-ம் திகதிகளில் மாலையாராதனையுடன் திவ்வியபூசை, பிரசங்கம் நடைபெறுமெனவும், 10-ம் திகதி மாலையாராதனைக்கு முன்பு அர்ச். லூர்துநாயகியின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும் 11-ம் திகதி ஞாயிறு காலை பெரிய பாடற்பூசையும் ஆசீர்வாதமும் நடைபெற்றுக் கொடியிறக்கத்துடன் திருநாள் முடிவுறுமெனவும் வண. பங்குக்குருவானவரால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. புளியடிக்குடாப்பங்கில் அர்ச். லூர்துநாயகியின் கருணை நிறைந்த ஆண் வாலிபர், "லூர்துமாதா சபை" எனப் பெயர்கொண்ட மாதாசபையொன்றை வண. கட்டளைக்குருவானவர் இல்லத்தில் சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் ஸ்தாபித்து, கிழமை தவறாது மேற்படி நேரம் கூட்டம் நடாத்துவதெனத் தீர்மானம் செய்துகொண்டது [illegible]ருகும்.

— நிருபர்


எங்களிடம் விற்பனைக்கு!



### முதல் நன்மைக் குறிப்பிடம்

| | |
|---|---|
| இரண்டாம் வகுப்பு | -40 |

*

### சிறுவர் குறிப்பிடம்

| | |
|---|---|
| மூன்றும் வகுப்பு | -60 |

*

### சின்னக் குறிப்பிடம்

| | |
|---|---|
| நாலாம் வகுப்பு ... | -80 |
| ஐந்தாம் வகுப்பு ... | -80 |

*

### பெரிய குறிப்பிடம்

| | |
|---|---|
| ஆறும் வகுப்பு ... | -75 |
| ஏழாம் வகுப்பு ... | -75 |
| எட்டாம் வகுப்பு ... | -75 |

*

### மாணவர் கிறிஸ்தவ போதகம்

| | |
|---|---|
| சிரேஷ்ட வகுப்பு ... | 1-25 |

*

### நவமணி வாசகம்

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு ... | -50 |
| மேற்பிரிவு ... | -50 |
| இரண்டாம் வகுப்பு ... | -60 |
| மூன்றும் வகுப்பு ... | -70 |
| நாலாம் வகுப்பு ... | -80 |
| ஐந்தாம் வகுப்பு ... | -90 |
| ஆறும் வகுப்பு | இல்லை |
| ஏழாம் வகுப்பு ... | 1-00 |

*

### கத்தோலிக்க வாசகம்

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு | இல்லை |
| மேற்பிரிவு ... | -50 |
| இரண்டாம் வகுப்பு | இல்லை |
| மூன்றும் வகுப்பு ... | -70 |
| நாலாம் வகுப்பு | இல்லை |
| ஐந்தாம் வகுப்பு ... | -90 |

*

### தமிழ் அறிவு

உயர்தர வகுப்பிற்குரியது
எழுதியவர்: க. பே. முத்தையா
பாடநூற் பிரசுர ஆலோசனைச்சபை அங்கீகரித்தது.
பிரதி விலை: 3-50.

*

### தமிழ்ப் பயிற்சி

ஆசிரியர்கள்:
க. பே. முத்தையா — ம. விக்றர்

| | |
|---|---|
| இரண்டாம் வகுப்பு ... | -65 |
| மூன்றும் வகுப்பு ... | -90 |
| நாலாம் வகுப்பு ... | 1-25 |

*

### வளரும் தமிழ்

ஆசிரியர்:
G. J. ஆசிநாதன்

| | |
|---|---|
| பகுதி–I ... | 1-30 |
| பகுதி–II ... | 1-75 |
| பகுதி–III ... | 2-75 |

*

### திருச்சடங்குக் கோவை

பிரதி விலை: 3-50.

| | |
|---|---|
| பூசைஉதவி மந்திரச்சுருக்கம் | -05 |
| ஆசிநீர் ஒரு ஞானப்பொக்ஷம் | -05 |

*

### யேசுக்கிறீஸ்துநாதருடைய பரிசுத்த சுவிசேஷம்

| | |
|---|---|
| அர்ச். மத்தேயு ... | 1-50 |
| அர்ச். லூக்கா ... | 1-25 |
| அர்ச். மாற்கு ... | 1-50 |
| அப்போஸ்தலர் நடபடிகள் | 1-00 |

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## விடுமுறைப் பதிவுப்புத்தகம்

சமீபத்திலே கொழும்பில் நடந்தேறிய தலைமையாசிரியர்களின் கருத்தரங்க மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட விஷயங்களில், ஆசிரியர்கள் பலரும் அடிக்கடி பாடசாலைக்குவராமல் நின்றுவிடுவதினால் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய வசதியீனத்தைப் பற்றியதும் ஒன்றாகும். இதுவிஷயமாய் ஆசிரியர்களின் விடுமுறைப்புத்தகங்கள் இருந்துவர வேண்டுமென்றும், அவர்களின் பதவி உயர்வு முதலியவற்றிலே அப்புத்தகங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

## அனுராதபுர இடைத்தேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையில் காலியாயிருக்கும் அனுராதபுர ஸ்தானத்துக்கு அபேட்சகர்களாக முன்வருவோர் தங்கள் நியமனபத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதினம் நிகழும் மாசிமாதம் 21-ந் திகதி புதன்கிழமையாகும். ஏற்கனவே காலியாக இருந்துவரும் மூதூர் முதலாவது எம். பி. ஸ்தானமும், வெலிமடை ஸ்தானமும் இன்னுமே காலியாய் இருந்துவருகின்றன.

## உள்ளூர் நெல் உற்பத்தி

தற்போது ஏறக்குறைய ஒருகோடியாக அதிகரித்துள்ள இலங்கையின் சனத்தொகையில் பாதிப்பேருக்குத்தானும் இப்போதைய உள்நாட்டு நெல் உற்பத்தி போதாதென்று விவசாயப்பகுதித் தலைவர் திரு. ஏ. வி. றிச்சேட் அறிவித்திருக்கின்றார். தற்போதைய அரிசிப்பாவனை விகிதப்படி 1968-ம் ஆண்டிலே 9 கோடியே 50 இலட்சம் புசல் நெல் அதிகமாகத் தேவைப்படுமெனப் பத்துவருடத் திட்டம் வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

## வெளிநாடு செல்ல அனுமதியில்லை

இலங்கையிலே வருமானவரி கட்டாத காரணமாக 68 வியாபாரிகள் வெளிநாடு செல்வதற்கு வருமானவரிப் பகுதி அனுமதிவழங்க மறுத்துள்ளது. இவர்களிலே பிறநாடுகளைச் சேர்ந்த 17 பேரும் வருமானவரி கட்டாததினால் தங்கள் சொத்துகளையும் இழந்துபோக நேரிடக்கூடும்போல் இருக்கிறது.

## பாடசாலைச் சுவீப் திட்டம்

இலங்கையின் சனத்தொகை வருடம் ஒன்றுக்கு 2 இலட்சத்து 60ஆயிரம் பேர்வீதம் — அதாவது தினமும் 700 பேர் வீதம் அதிகரித்து வருகின்றது. அதனால், பாடசாலைப் பிள்ளைகளின் தொகையும் வருடம்தோறும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. கல்விப்பகுதியின் புள்ளிவிபரப்படி தற்போது குறைந்தபட்சம் 700 அதிகமான பாடசாலைகள் தேவைப்படுகின்றன. பிள்ளைகள் அதிகரித்து வருவதையிட்டு மேலதிக இடம் கண்டுகொள்ளுமாறு தற்போதுள்ள பாடசாலைகளும் விசாலமாக்கப்பட வேண்டியிருக்கின்றன. அதனால், பாடசாலைகளைக் கட்டுவதற்குத் தேவைப்படும் நிதியைக் கண்டுகொள்ளத் தக்கதாய்ப் பாடசாலைச் சுவீப் ஒன்றை நடத்துவதுபற்றிக் கல்விப்பகுதி பரிசீலனை செய்துவருகின்றது. ஆனால், தேசிய கல்விக் கமிஷன் ஆலோசனை கூறியதுபோல மாவட்ட அடிப்படையிலே சுவீப் ஒன்றை நடத்துமிடத்துச் சேரும் பணம் குறைவாயிருக்குமாதலால் அது தகுதியாகமாட்டாதென்று கல்விப்பகுதி அதிகாரிகள் கருதுகின்றார்கள்.

## ஆசிரியர்க்கு எச்சரிக்கை

தமது பகுதியிலுள்ள வித்தியாதரிசியிடமிருந்து எழுத்துமூலம் உத்தரவு பெறாமல் இடமாற்றங்கள், நியமனங்கள் சம்பந்தமாய் எவரையுமே காணபதற்கென்று பாராளுமன்ற அங்கத்தவர், செனற்றர், தொழிற்சங்க உத்தியோகஸ்தருடனோ அன்றேல் வேறெவருடனுமோ கல்விப்பகுதிக்கு அல்லது கல்விமந்திரி காரியாலயத்திற்குச் செல்லும் ஆசிரியர்களின் சம்பளத்திலே அன்றையதின சம்பளம் வெட்டுப்படுமென்றும், எவரையுமே சந்திக்க அனுமதிக்கப்படாதென்றும் வித்தியாதிபதி அறிவித்திருக்கின்றார்.

## பாடசாலைகளும் கடன்களும்

அடுத்துவரும் 13-ந் திகதி செவ்வாயன்று சனப்பிரதிநிதிகள்சபை கூடும்போது, தனியார் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்ததால் ஏற்பட்டுள்ள பலவித செலவுகளுக்கென்றும் 11 இலட்சத்து 93 ஆயிரத்து 200 ரூபா உபமான்யம் ஒன்றைக் கல்விமந்திரி கேட்கவிருக்கின்றார். தனியார்பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தபோது அவற்றின் கையிருப்புகளையும், ஆஸ்திகளையும் மட்டுமல்ல, அவற்றின் கடன்களையும் பொறுப்பேற்றமையால் இவற்றைத் திருப்பிக் கொடுப்பதற்கே இந்த உபமான்யமாகும்.

## சதித்திட்டம்பற்றிய விசாரணை

அரசாங்கத்தைக்கவிழ்க்கச் சதிசெய்தார்களென்று இதுவரை எல்லாமாக 29 பேர் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில்உயர்தர இராணுவ அதிகாரிகள் பதின்மூன்றுபேரும், உயர்தர பொலிஸ்அதிகாரிகள் ஒன்பதுபேரும், முன்னைநாள் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்றர்-ஜெனறல் ஒருவரும், சிவில் சேவையாளர் ஒருவரும், மோட்டர்மெக்கானிக் ஒருவரும், தவறணைக் குத்தகைகாரர் ஒருவரும் அடங்குவார்கள். இவர்களில்கள், சாராயத் தவறணைக் குத்தகைகாரரான திரு. ஓ. சி. கொறியா என்பார் பண்டாரநாயக்கா கொலைவழக்கு விசாரணையிலே முக்கிய சாட்சியாக இருந்தவர். மோட்டர் மெக்கானிக்கான திரு. அனுரா டி சில்வா என்பார் பண்டாரநாயக்கா கொலைவழக்கில் மூன்றாம் எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்து பின்னர் சுப்பிறீங்கோட்டு விசாரணைமுடிவிலே சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்யப்பட்டிருந்தவர்.

## துறைமுக வேலைநிறுத்தம்

ஏறக்குறையப் பதினேழாயிரத்து ஐஞ்ஞூறு துறைமுக ஊழியர்கள் சென்ற சனிக்கிழமைகாலை வேலைக்குத் திரும்பியதோடு 53 தினங்களாக நடைபெற்றுவந்த துறைமுக வேலைநிறுத்தம் முடிவடையலாயிற்று. இதுவரை நடைபெற்றுள்ள துறைமுக வேலைநிறுத்தங்கள் எல்லாவற்றிலும் அதிகம் கூடிய தினங்கள் நீடித்திருந்த இந்தவேலைநிறுத்தம் முடிந்ததாக அறிவிக்கப்பட்டதும் அத்தனை ஊழியர்களையும் அங்கத்தவராகக் கொண்டுள்ள பதினொரு தொழிற்சங்கங்களின் தலைவர்களும் அவர்களின் அணிவகுப்புக்குத் தலைமைவகித்துத் துறைமுகத்துக்கு அவர்களை வழிநடத்தினார்கள். அன்று தினமே இராணுவத்தினரும் அங்கிருந்து வெளியேறினர். 53 தினங்களாக வேலைநிறுத்தஞ் செய்தபின் மீண்டும் வேலைக்குப்போன துறைமுகத் தொழிலாளர்கள் 1 இலட்சத்து 27 ஆயிரம் தொன் சாக்குகளை அப்புறப்படுத்த வேண்டியோரானார்கள்.

## பயிற்சிபெறச் சென்றுள்ளார்

யாழ்ப்பாணம், லேடன் இன்டஸ்றீஸ் லிமிற்றெட் ஸ்தாபன நிர்வாக அதிபர் திரு. ஏ. எம். போசெவ் அவர்கள் அமெரிக்க உதவி நிலையத்தின் உபகாரச் சம்பளம்பெற்று நவீன கைத்தொழில் அபிவிருத்தி முறைகளில் பயிற்சிபெறுவதற்காக இந்தியா சென்றிருக்கிறார். இவர் நான்குமாதகாலம் இந்தியாவிலும், ஏனைய நாடுகளிலும் தங்கியிருந்து பல்வேறு ஸ்தாபனங்களையும் தரிசித்துக் கம்பளிச்சட்டைகள், நைலோன் கால்மேசுகள் முதலியன தயாரிக்கும் விஷயமாய்த் தகுந்த பயிற்சிபெற்றுக்கொள்ளுவார்.

## யாழ்ப்பாண இரத்தவங்கி

யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியின் இரத்தவங்கிக்கு இரத்தம் உதவுமாறு யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுக்கும் ஓர் அவசிய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வைத்திய சுப்பிறின்ரெண்டன் விடுத்துள்ள இந்த வேண்டுகோளிலே: ஆஸ்பத்திரிக்குத் தினமும் பெருந்தொகையான இரத்தம் தேவைப்படுகிறது; ஆனால், கொடுபடும் இரத்தமோ குறைவாகவே தொடர்ந்திருந்துவருகிறது; அதனால், இரத்தம் தேவைப்படும் நோயாளர்பாடு கவலைக்கிடமாகவே இருக்கிறது; அனுபவமிக்க வைத்திய அதிகாரி ஒருவராலேயே இரத்தம் எடுக்கப்படுகிறது; அத்துடன் இரத்தோபகாரிகள் ஒவ்வொருவருக்கும் பத்துரூபா சன்மானமாகவும் வழங்கப்படுகிறதெனத் தெரிவித்திருக்கின்றார்.

## 1,500 இளைஞர்களின் மனு

குருநாகலிலுள்ள மாலியதேவா கல்லூரியின் விடுதிச்சாலையிலுள்ள மனேஜர் பதவிக்கு எஸ். எஸ். சி. தராதரப்பத்திரம் பெற்றுள்ள 1,500 பேருக்கு மேற்பட்ட இளைஞர்கள் மனுப்பண்ணியிருக்கின்றார்கள். உணவு, இல்லிட வசதியுடன் இந்தப்பதவிக்குக் கொடுபடவிருக்கும் மாதச்சம்பளம் 125ரூபாவாகும்.

## ஆரோக்கிய போட்டிக் கேடயம்

வடமராட்சிப்பகுதிப் பாடசாலைகளிடையே நடந்தேறிய ஆரோக்கியப் போட்டியில் வதிரிதெற்கு, கத்தோலிக்கபாடசாலை முதலிடத்தைப் பெற்றுள்ளது. இப்போட்டிக்கான வெற்றிக்கேடயத்தைச் செல்வி ஜி. ஞானமணி எனும் மாணவி ஈட்டிக்கொண்டார். போட்டிக்குத் தலைமைவகித்த அப்பகுதி வித்தியாதரிசி திரு. எம். கே. சிகாமணி அவர்கள் பேசியபோது: "உடல்சுத்தம் உளச்சுத்தத்தை அளிக்கும்; உளச்சுத்தம் உள்ளவர்கள் பலர் ஒன்றுகூடித்தான் ஒருசிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும்; இத்தகைய போட்டிகள் இவைசம்பந்தமாய் அதிகஊக்கம் அளிக்கு"மெனக் குறிப்பிடலாயினர்.

## இருபதுரூபா வேண்டுமாம்

உள்நாட்டுநெல்லை உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் தற்போது அரசாங்கம் புசல் ஒன்றுக்குப் 12 ரூபா விலை கொடுத்து வாங்குகின்றது. இந்த விலையை 20 ரூபாவாகக் கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்கும் பிரேரணை ஒன்று பொல்காவெலப் பட்டினசபையின் மாதாந்த கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியிருக்கின்றது.

## வெளிநாட்டுச் செய்திகள்

● கம்யூனிஸ்த ஆதிக்கத்தில் வந்துள்ள கியூபா அரசாங்கம் அனுப்பியுள்ள புதிய தூதுவரான டக்றர் லூயிஸ் பெர்னாண்டெஸ் என்பவரைப் பரிசுத்த பாப்பரசர் சென்ற 4-ந் திகதியன்று வரவேற்றாரென வத்திக்கானிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. அங்குள்ள கியூபா தூதுவர் காரியாலயத்தில் கடந்த சுமார் ஒருவருட காலமாகத் தூதுவர் எவரும் இருந்துவரவில்லை.

● இந்திய பொதுத் தேர்தலிலே அதிகம் பிரசித்திபெற்ற அபேட்சகர் 41 வயதுடைய ஜெய்ப்பூரின் காயத்திரிதேவி மகாராணியாவர். அங்கே நிகழும் மாசிமாதம் 21-ந் திகதிக்கும் 25-ந் திகதிக்குமிடையே வாக்கெடுக்கப்படவிருக்கிறது. இவர் சுதந்திரக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடுகின்றார். ஜெய்ப்பூர் பாராளுமன்ற ஸ்தானத்திற்கு இவருடன் பத்து அபேட்சகர்கள் போட்டியிடுகின்றார்கள். ஜெய்ப்பூர் தொகுதியில் 4,63,000 வாக்காளர் இருக்கின்றார்கள்.

● தாம் ரூஷியாவுக்கு விஜயஞ் செய்வதானாலும் அமெரிக்க – ரூஷிய உறவை இன்னுமே துரதிர்ஷ்டவசமாகச் சூழ்ந்துள்ள வேற்றுமைகள் நீங்கி இரு நாடுகளுக்குமிடையே இப்போதுள்ள உறவில் பிரத்தியட்சமாகத் தெரியக்கூடிய விசேஷ மாறுதல் ஒன்று ஏற்பட்டாலன்றித் தாம் அங்கு செல்ல முடியாதென்று அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்கள் இம்மாதம் 1-ந் திகதியன்று பத்திரிகைநிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்திருக்கின்றார்.

● தாய்லாந்தின் தலைப்பட்டணமாகிய பாங்கொக் நகரிலே சிறு பிள்ளைகளை அபின்அருந்தும் பழக்கத்தில் ஈடுபடுத்தும் நோக்கமாகச் சிலர் அபின் கலந்த பிஸ்கோத்துகளைச் செய்து தலைச்சுமையாகக் கொண்டுசென்று விற்பனைசெய்துவருவதாலே அவைகளை வாங்கி உண்ணவேண்டாமென்றும், உண்டால் பெருந்தீங்கு விளையலாமென்றும் பிள்ளைகளுக்கெல்லாம் அரசாங்கம் ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

● கம்யூனிஸ்த அபேட்சகராகவோ அன்றேல் கம்யூனிஸ்தரது ஆதரவுடன் போட்டியிடும் அபேட்சகராகவோ எதிரேவரும் பொதுத்தேர்தலிலே முன்வருவாருக்குவாக்களிக்கவேண்டாமென்றுகோரிக் கேரள இராச்சியத்திலுள்ள பதினாறு அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் சேர்ந்து கையெழுத்திட்ட திருமுகம ஒன்றைப் பிரசித்தஞ் செய்திருக்கின்றனர். "கம்யூனிஸத்தை எதிர்ப்பது எங்கள் புனித கடன்" என்று அதிலே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

● மேற்குஜேர்மனியிலே மெயின்ஸ் நகர சர்வகலாசாலையைச்சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துச் செய்துள்ள கண்டசம்பந்தமான மின்சார கருவியைக்கொண்டு ஊமைகளான அநேக நோயாளிகள் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். ஒரு சட்டைச்சாக்கு ரோக்கைப்போன்ற இந்தக்கருவி கண்டத்தின் வெளிப்புறத்திலே வைக்கப்படுவதாக அச் சர்வகலாசாலையின் கண்ட ஆரோக்கியசாலையைச் சேர்ந்த டக்றர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

இம்மாதம் 12-ந் திகதியாகிய வருகிற திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் யாழ்ப்பாணச் சுப்பிறீங் கோட்டிலே பன்னிரு கொலைவழக்குகளும், கொலைசெய்ய எத்தனித்த வழக்குகள் இரண்டும் விசாரணை செய்யப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### மாசிமாதம் — 1962

| | | | |
|---|---|---|---|
| 11 | ஞா. | 2 **பிரத்தியட்சத்தின்பின் 6-ம்ஞாயிறு** (வி. ம,) | ப |
| 12 | திங். | தேவமாதாவுடைய ஊழியர்சபையின் ஏழு பரிசுத்த ஸ்தாபகர்கள் | வெ. |
| 13 | செ. | ம காலதினம் (ஞாயிறுபூசை) | ப |
| 14 | புத. | ம காலதினம் (ஞாயிறுபூசை) (அர்ச் வலென்தீனுஸ் ஞா.) | ப |
| 15 | வி. | ம காலதினம் (ஞாயிறுபூசை) (அர்ச். வவுஸ்தீனுஸ் ஜோவீற்று ஞா.) | ப. |
| 16 | வெ. | ம காலதினம் (ஞாயிறுபூசை) | ப. |
| 17 | ச. | ம மரியாயின் சனி | வெ. |


சத்திய வேத

# பாதுகாவலன்

1962-ம் ஆண்டு
மாசிமாதம் 11-ந் திகதி


## எமதுநாட்டின் எதிர்காலம்

நமதுசெல்வநாடாகிய ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்த பதினன்காவது நிறைவுதினம் சென்ற 4-ந் திகதியன்று வந்துபோயிற்று. நான்கு நூற்றாண்டுகளுக்குமேலாகப் பிற நாடுகளின் ஆட்சியிலிருந்த எமது நாடு உலகின்சுதந்திர நாடுகளில் ஒன்றாகிப் பதினான்குஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. சுதந்திர தினமானது எந்நாட்டிலும் பெரிதும் ஆர்வத்துடனும், குதூகலத்துடனும் கொண்டாடப்படுவதொன்றாகும். எமதுநாட்டிலே இம்முறை இச்சுபதினத்தைப் புராதனப் பெருமைவாய்ந்த இராசநகரமாகிய அனுராதபுரத்திலே பெருங் கோலாகலமாகக் கொண்டாடுதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருந்தது. ஆனால், அரசாங்கத்தையே கவிழ்ப்பதற்கான சதித்திட்டம் கண்டுபிடிக்கப்பட்டதன்விளைவாய் இந்த ஏற்பாடுகளெல்லாம் கைவிடப்படலாயின. அதனால்எமது நாடு சுதந்திரமடைந்த வருடமாகிய 1948-ம் ஆண்டுமுதல் தொடர்ந்து பெருமிதமாகக் கொண்டாடப்பட்டு வந்த இச்சுபதினமானது இம்முறை மகிழ்ச்சிகுன்றியதாய், மங்குளமான தாய்க் காட்சியளிக்கலாயிற்று.

எமது நாடு சுதந்திரம்பெற்ற ஆரம்பவருடங்களிலே அது தன்னை எதிர்கொண்டுவந்த பலவித கஷ்டங்களையும் எதிர்பாராதவிதமாக மேற்கொண்டு பலதுறைகளிலும் முன்னேறியது. அக்காலத்திலே அதுபிற நாடுகளில் சிறந்த பாராட்டுகளைப் பெறலாயிற்று. உலகின் அநேக நாடுகளிலே அராஜகமும், தாறுமாறுகளும், கலகங்களும் தலைகாட்டிக்கொண்டிருக்க, இங்கு காணப்பட்ட சமாதானத்தையும், அமைதியையும், கட்டுப்பாட்டையும், ஒத்துழைப்பையும் கண்ணுற்ற சில நாடுகள் பொறாமைப்பட்டனவென்றால் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆனால், சிலவருடகாலம் செல்லாமுன்னரே நல்லமரத்தில் புல்லுருவி பற்றியவாறாய் இங்கும் விபரீதகாலம் பிறந்தது. இன்று எமதுநாடு அதிகம் கஷ்டமான ஒருகாலத்தினூடாகக் கழிந்துகொண்டிருக்கின்றது. ஒன்பதுமாதங்களுக்குமேல் அவசரகால நிலைமையின்கீழ் அது இருந்து வருகிறது. அவ்வாறிருந்தும் சமீப மாதங்களில் அநேக வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்து ஏற்கனவே நாட்டின் பொருளாதாரத்தைச் சீருலைத்துத் தொழிலாளர் வகுப்புகளிடையே அமைதியின்மையை உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றன. எமது வெளிநாட்டுமூலதனமும் குறைந்து கொண்டு வருகின்றது. பொருளாதார நெருக்கடி ஒன்றுநிச்சயமாக வந்துவிடுபோல் இருக்கிறது.

அங்ஙனமாக, இந்நாட்டிலுள்ளமக்களிடையே ஒருவிசேஷப்பட்டசாகியத்தினர் இரண்டாந்தரப் பிரசைகளாக—தங்கள் சொந்த நாட்டிலேயே அந்நியர்களாகத்தானும் இன்று கொள்ளப்படுகின்றனர். ஆனால், இந்நாட்டின் சுதந்திரத்திற்காக அவர்களுமே போராடினார்கள். நாடு சுதந்திரம்பெற்றபோது அவர்களுமே மகிழ்ச்சியுற்றார்கள். அவர்களுக்குமே கீர்த்தி உண்டாயிற்று. ஆனால், இன்றோ அவர்கள் இந்தச் சுதந்திரதினத்தை ஒரு சுபநாளாக அல்ல ஒருதுக்கநாளாகவே அனுட்டிக்கிறார்கள். இதையிட்டு இந்நாட்டு மக்கள் அனைவருமே கவலைகொள்ள வேண்டியவர்கள். இந்த நிலைமை சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டும். இன்றும் நாடற்றபிரசைகளென்று கொள்ளப்படுகின்றபல்லாயிரவரின் பிரச்சினைகளும் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும். அன்றேல், இந்நாட்டிலே அமைதியையும், சமாதானத்தையும் கண்டுகொள்வது முயற்கொம்பாகவேயிருக்கும்.

நிற்க, எமதுநாடு அரசியல்விடுதலை அடைந்துள்ளதல்லாது பொருளாதாரவிடுதலை அடைந்திலது. நமது பொருளாதாரத்திற்கு முக்கியமான தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் ஆதியவற்றின்விலைகள் வெகுவாகவீழ்ச்சியுடைந்து. அதனால் வருமானநஷ்டம் ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைச்செலவு ஏறுமுகமாகிவிட்டது. வேலையில்லாத்திண்டாட்டம் மிகமோசமாகிவிட்டது. பல்வேறு இனத்தவரும், பல்வேறு மொழியினரும், பெரும்பான்மையினரும், சிறுபான்மையினரும் வதிகின்ற எமது நாட்டிலே அரசாங்கம் தனிச்சிங்களகொள்கையைக் கடைப்பிடித்து மொழிப்பிரச்சினையை உண்டுபண்ணியதால் மேலும்நிலைமை படுமோசமாகிவிட்டது. தமிழருக்கு எதிராக இன்று காண்பிக்கப்படும் துவேஷம் ஏனையசிறுபான்மையினருக்கு எதிராகவும் காண்பிக்கப்படலாம். இதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தோன்றாமலில்லை. சிங்கள மக்களிடையே இன்று பிளவுஏற்பட்டுள்ளது. இந்தப்பிளவு மதஅடிப்படையில் ஏற்பட்டுள்ளதாகும். அரசாங்கம் தனது அடிப்படைக்கொள்கைகளைமாற்றிச் சிறுபான்மையினரைப் பொறுத்தமட்டிலே நீதியான கொள்கையைக் கடைப்பிடிக்காவிடின் எமதுநாடு சுதந்திரமடைந்ததில் சுகமேயில்லை.

பெரிதும்அனுகூலமற்ற ஓர் சூழ்நிலையிலே நமதுசுதந்திரத்தின் பதினைந்தாவதுஆண்டில் நாம் பிரவேசித்திருக்கிறோம். "நெருக்கடிநிறைந்த இவ்வேளையிலே நாட்டுமக்கள் எல்லோரும் அமைதியாகவும், கட்டுப்பாடாகவுமிருந்து சட்டத்தையும், ஒழுங்கையும் கடைப்பிடிக்க வேண்டும்; பொய்ப்பிரசாரத்திலே மக்கள் சிக்கிக்கொள்ளாது அமைதியாயிருந்து சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டும்" என்று பிரதமர்சிறீமா விடுத்துள்ள சுதந்திர தினச் சுபசெய்தியுடனேயே இந்தப்பதினைந்தாவதுஆண்டில் நாம் அடியெடுத்துவைத்திருக்கின்றோம். இத்துடன் பெரியஅரசியல்வாதி ஒருவர் விடுத்தசெய்தியிலே, "நண்பர்களைப் பகைத்துக் கொள்வதில் இந்த அரசாங்கம் பெருந்திறமை காட்டியது; முறையே தமிழரையும், கத்தோலிக்கரையும், புத்தகுருமாரையும், இறுவியாபாரிகளையும், ஆசிரியர்களையும், இறுதியாகத் தொழிலாளர்களையும் அது பகைத்துக்கொண்டிருக்கிறது; விதியைப்பொறுத்தவரையில் நாம் அதிகம்தாழ்ந்தநிலையில் இருக்கின்றோம்; காலமெல்லாம் கடன்பட்ட பணத்தில் வாழ்கின்றோம்; வர்த்தகம் மந்தநிலையிலுள்ளது; குறிப்பிடத்தக்க அபிவிருத்திவேலைகள் ஒன்றுமேநடைபெறவில்லை; வரிச்சுமை மத்திய வகுப்பார்மீதும், பொதுமக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது; இந்த அரசாங்கத்திற்கு ஒருநல்ல எதிர்காலம் இருப்பதாகத் தெரியவில்லை" எனக் கூறியிருக்கின்றார்.

நிற்க, கடந்த பதினான்குஆண்டுகளிலும் சாதிக்கப்பட்டதென்ன? அரசியல் சுதந்திரம் பெற்றுள்ளோம். ஆனால், சுதந்திரவாழ்வின் இலட்சியங்களை நாம் அடைந்துள்ளோமா? அரசியற்சுதந்திரத்தைத் தொடர்ந்து எதிர்பார்த்திருந்த பொருளாதாரசுதந்திரம் எய்தியுள்ளோமா? இல்லை. இதற்கு எமது நாட்டிலுள்ள சகல மக்களினதும் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் அத்தியாவசியகம். தாய்நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்காக மக்கள் தியாகம்செய்யவும், தன்னலமற்றசேவை செய்யவும், ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்கவும் தயாராயிருக்கும்வரை பொருளாதார அபிவிருத்தி என்பது சாத்தியமன்று. நாட்டுமக்கள் ஒற்றுமையற்றிருந்தால், ஒத்துழையாதிருந்தால் எமதுநாட்டின் எதிர்காலத்தைப்பற்றிப் பேசவேண்டியதில்லை.

# பிரத்தியட்சத்தின் பின்வரும் 6-ம் ஞாயிறு


—வண. மைக்கல் ரொட்ரிக்கோ சுவாமிகள்—
தமிழாக்கம்: தமிழ்க் கழகம், லங்காமாதா குருமடம், கண்டி.


**இன்றைய பூசையின் கருத்து:**

பெத்லகேமிலே கிறிஸ்து பிறந்தார். யூதர்களுக்கும், இடையர்களுக்கும் மட்டுமன்றி, அவர்களைவிடப் பரந்த ஓர் சமுதாயத்திற்கு அவர் தம்மை வெளிப்படுத்தினார். ஏனெனில், மூன்று அரசர்கள்மூலம் அவர் தம்மை மற்றைய இனத்தவரைக் கொண்ட முழு உலகிற்கும் தம்மைப் பிரத்தியட்சப்படுத்தினார். சுவிசேஷத்தின் நற்செய்தியை மென்மேலும் பரப்புதற்கொப்பாயமைந்தது இச்செய்கை. ஆகவேதான் "பரவிச் சென்று கிறிஸ்துவின் நன்மைத்தனத்தைப் பரப்புவாய்" என்று ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இன்று சொல்லப்படுகின்றது.

**செபமும் போதகமும்:** எடுத்த எடுப்பிலேயே, இன்றைய வழிபாட்டில் கருத்தொன்றிய இருவார்த்தைகள் காணக் கிடக்கின்றன. தெசலோனியருக்குப் புனித சின்னப்பர் வரைந்துள்ள நிருபத்திலே "ஆண்டவரின் வார்த்தை உங்களினின்றே பரவியது..." எனக் குறிப்பிடுகிறார். இந்தப் பரவுதலின் சத்தியத்தை, மோட்ச இராச்சியத்தின் வளர்ச்சியையும், வரப்பிரசாதத்தையும் குறிப்பிடும் இன்றைய சுவிஷேசம் காட்டுகின்றது. மரம் வளர்த்து கிளைகள் பரவுகின்றன. மூன்று மாக்கால் மாவுக்குள் புளிகாரம் ஊடறுக்கின்றது.

கிறிஸ்தவ சமயம் சீவிக்கப்பட வேண்டிய ஓர் வாழ்க்கைமுறை. உலகத்தின் ஆசாபாசங்களினின்றும், தான் என்ற அகங்காரத்தினின்றும் நம்மை விடுவிக்கும் ஓர் சாதாரண மருந்தல்ல அது. ஆனால், அது ஓர் நேர்மையான வாழ்க்கைத்திட்டம். பிரவேச வாக்கியம், இறைவனின் நன்மையைப் பரப்பும்தேவதூதர்களின் மத்தியில் நம்மை இட்டுச் செல்கின்றது. தூதாயிருப்பினும்சரி, தூதாயிருப்பினும்சரி,—தேவதூதராயிருப்பினும்சரி, சுவிசேஷமாயிருப்பினும்,— இறைவனின் கருவிகள் அவரின் அன்பைக் கடல்கடந்த தீவுகளுக்கும் பரப்புகின்றன.— நமது சொந்த இலங்கைத்தீவுக்கும்கூட அமானின் அன்பு அறைகூவப்படுகின்றது. சபைச் செபம், எமது மானிட வாழ்க்கை முறையை மையமாய்க் கொண்டுள்ளது. "கேள் மகனே! புத்தியுள்ளவனாயிரு" என்று முரட்டுக் குணம் பிடித்த தன் பிள்ளைக்குப் புத்தி கூறும் பெற்றோரை நாம் காண்கிறோம். ஆனால், மகனோ புத்திக்கேற்ப நடப்பதில்லை. அவன் மனிதனிலும் குறைந்தவனாக நடக்கிறான். ஏனெனில், மனிதன் பகுத்தறிவுள்ள ஓர் பிராணி. ஆனால், பகுத்தறிவுமட்டும போதாது. தெய்வீக ஞானத்திற்கு எம்மை முற்றாக, உடல், ஆவி சேர்த்து, அர்ப்பணிக்க வைக்கும் மானிட ஞானம் எமக்கவசியம். இதற்குத் தாழ்ந்ததாக அமையும் வேறெதுவும் மனித புத்திக்கு ஓர் களங்கமாயமையும. ஆகவேதான் சபைச்செபத்திலே: "நியாயமான காரியங்களிலேயே நாங்கள் என்றும சிந்தனையுள்ளவர்களாய்த் தேவரீருக்குப் பிரியமுள்ளதையே வாக்கினாலும், கிரியையினாலும் நிறைவேற்றும்படியாக" மன்றாடுகிறோம. "ஆண்டவரே, ஆண்டவரே" என அழைக்கும் எல்லோருமே இரட்சிக்கப்படுவதில்லை. நிருபம் கூறுவதுபோல் விசுவாசம், நம்பிக்கை, சிநேகம் ஆகியவை தேவை. ஆனால், அன்பு கிரியையினாலேயே நிரூபிக்கப்படுகிறது. "உங்களுடைய விசுவாசத்தின கிரியையும், உங்கள் பிரயாசையையும் பரம அன்பையும்.... உங்கள்திடமான நம்பிக்கையையும்.. ." இது அன்பை கிரியைகளினால் நிரூபிக்கும், கிறிஸ்தவ வாழ்க்கைத் திட்டத்தை விளக்குகிறது. நாம் இறைவனை நேசிப்பவர்களாய் இருந்தால்தான் இச் செயல்களை நம்மால் ஆற்ற முடியும். ஏனெனில், நன்மை செய்வது, நல்லவனாய் வாழ்வதிலே தான் தங்கியிருக்கிறது. கிறிஸ்துவின் வாழ்வை, அப்போஸ்தலர் நடபடி பின் வரும் முறையில கூறுகிறது. "அவர் **நன்மை செய்தார்**" இதைவிட அவர் புறம்பானதொன்றைச் செய்ய முடியாது. ஏனெனில், நன்மைத்தனமே மனிதர் மத்தியில் நடமாடிற்று. இன்னும் சில நிமிடங்களில் அவர் தன் அன்பை இந்தப் பீடத்திலேயே நிரூபிக்கப்போகின்றார்.

**தெய்வீக விருந்து:** போதகப் பகுதி முடிவடைகிறது. கடவுளின் நல்வார்த்தை எமது இதயங்களில் பரப்பப்பட்டது நாமும் நமது வாழ்க்கையினாலும், கிறிஸ்துவின்மேல் எமக்குள்ள விசுவாசத்தையும் அன்பையும் கூறுவதினாலும், அந்நல்வார்த்தையைப் பரப்பவேண்டும். தமதுமீட்பின் மூலமாக தம்வரப்பிரசாதத்தைப் பரப்பினார் கிறிஸ்து. நாம் மடியாமல் சீவிக்க, தம்மிடமிருந்து ஊறும்அன்பை, எமக்காக, இந்தத் திருப்பூசையில் புதுப்பித்து, இன்னுமொருமுறை இரத்தம் சிந்தாப்பலியாகத் தம்உயிரை அர்ப்பணித்து, அன்புக்குச் சான்று தருகிறார் (காணிக்கைச் செபம்).

கிறிஸ்துவே இவ்வுலகின் புளிக்காரம். அந்தப்பணியைத் தம்முடன் ஆற்ற அவர் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் நியமித்துள்ளார். இச்செயல்களின் திட்டத்தின் உறுதிபலியாக்கப்பட்ட தேவதிரவிய அநுமானமூலமாய் எம்முடன் வசிக்கும அவரினின்றே வருகிறது. **தேவவசீகரத்தின்** பின் நிலவும் மௌனநேரத்தில் கிறிஸ்துவோடும், கிறிஸ்துவிலும் சீவிப்பதன்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்

றெஜினல்ட் ஆபிரகாம். ஓ. எம். ஐ.

## 2

### பொதுச்சங்கம் என்ருல் என்ன ?

ஓர் சாதாரணமனிதன் யேசுக்கிறீஸ்துநாதரின் திருச்சபையை இருவழிகளில் நோக்குகிறுன். ஒருகரையில், அதன் **"வெளித்தோற்றத்தை"**க்கண்டு அதுஒரு சங்கமென முடிவுகட்டுகிறுன். மக்களை ஆட்சிபுரிவதற்கு ஏதுவான மேற்றிராணிமாரும், குருமாரும்சேர்ந்த அரசியற்கூட்டமென நினைக்கிறுன். அவன கண்களுக்குத் தென்படுவது ஒரு மனிதக்கூட்டமொழிய வேறென்றல்ல.

அடுத்தகரையில் ஒருவிசுவாசமுள்ள மனிதன் திருச்சபையின் "உட்தோற்றத்தை" நோக்குகிறுன். அவன் அதைக் கடவுளின் திருச்சபையெனவும், யேசுக்கிறீஸ்துநாதரின் ஞானச்சரீரமெனவும் முடிவுகட்டுகிறுன். திருச்சபையை நல்வழியில் இட்டுச்செல்வதற்கு இஸ்பிரீத்துசாந்துவானவர் பொறுப்பாயிருப்பதையும் காண்கிறுன்.

இவற்றில் இரண்டாவது முறையே திருச்சபையின் உண்மையான விளக்கம். அதன் அங்கத்தவர்கள் பாவஅக்கிரமங்களிலும், தவறுதல்களிலும் அமிழ்ந்தியிருந்தும், அப்போஸ்தலர்களுடைய காலத்திலிருந்து இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களாகத் திருச்சபை தொடர்ந்துவருவது கடவுளின் வல்லமையல்லாது மனிதனுடையதல்ல. இரண்டாயிரம் வருடங்களாகத் திருச்சபையைத் தாங்கிநிற்கும் வச்சிரத்தூண்களாகக்காட்சியளிப்பவைஇருபது பொதுச்சங்கங்களாகும். இவ்விசேஷவிதமான வல்லமைக்குக் காரணமாயிருப்பவர் இஸ்பிரீத்துசாந்துவானவரே!

நாம் பொதுச்சங்கத்துக்கு வியாக்கியானம் கூறுவோமாகில் அதைப் பின்வருமாறு விளக்கமுடியும். "திருச்சபையின் மதம், ஒழுக்கமுறை முதலியவைகளை ஆராய்ந்து தீர்மானிக்கும் பொருட்டு முழுஉலகத்திலுமுள்ள மேற்றிராணிமார்கள், வேதசாஸ்திரிகள், நிபுணர்கள் பாப்புவினுல் அழைக்கப்பட்டு ஒன்ருக அவருடைய தலைமையின்கீழ் சங்கங் கூடுவதே பொதுச்சங்கமாகும்.

எவ்வித பொதுச்சங்கமும் பாப்புவின் விருப்பத்திற்கெதிராகவும் பிரசித்த அங்கீகாரமின்றியும் கூட்டமுடியாது. பொதுச்சங்கத்தில் பாப்பாண்டவர் தலைமைவகிக்காவிடில் அதைப் பொதுச்சங்கம எனும் நாமத்தால் நாம் அழைக்கமுடியாது. அழைக்கப்பட்ட மேற்றிராணி மார்களாலும், வேதசாஸ்திரிகளாலும் எவ்வித கருமங்கள்தானும் ஆராய்ந்து தீர்க்கப்பட்டு முடிவாயினும், அவை பாப்புவினுல் அங்கீகரிக்கப்படாவிடின் அவைகளுக்கு விசுவாசிகள் எவ்விதத்திலும் அமையக் கட்டுப்பட்டவர்கள் அல்லர். இதிலிருந்து நாம் பாப்பு திருச்சங்கத்தின் தலைவர் எனவும், மேற்றிராணிமார் எல்லோருக்கும் மேலானவர் எனவும் அறிகிறோம்.

பொதுச்சங்கம் "முழுஉலகத்திலுமுள்ள மேற்றிராணிமார்களையும், வேதசாஸ்திரிகளையும் கொண்டுள்ளது." பொதுச்சங்கத்தில் கலந்துகொள்ள ஒவ்வொரு மேற்றிராணியாருக்கும் உரிமை இருப்பினும், அவர்கள் கட்டாயமாகச் சமூகமளிக்கவேண்டிய கடமையில்லை. உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமிருந்து மேற்றிராணிமார் செல்வார்களாகில் அதுதிருப்தியாகும். ஏனெனில், இதுவே திருச்சபை பொதுவாயிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வெளி அத்தாட்சியாகும்.

பொதுச்சங்கத்தின் நோக்கம், ஒரு சிறு வட்டாரத்தைக் குறித்துமட்டும் கவனம் செலுத்துவதல்ல. சர்வலோகத்திலுமுள்ள திருச்சபையின் விசுவாசம், பழக்கவழக்கங்களைப்பற்றி ஆராய்வதே அதன் நோக்கமாகும். ஆகவே, அகில உலகிலுமுள்ள மேற்றிராணிமார்கள் பாப்புவுடன் ஒரு பொதுச்சங்கத்திற்காக ஒன்றுசேரும் பொழுது இஸ்பிரீத்து சாந்துவானவர் விசேஷவிதமாய்த் தமது கொடைகளை அவர்கள்மேல் பொழிந்தருளுவார். இதன்நிமித்தமே பொதுச்சங்கத்தின் சட்டங்கள் வழுவாவரத்தை அடிப்படையாகக்கொண்டுள்ளன. நாம் திருச்சபையின் பொதுச்சங்கங்களை உற்றுநோக்குவோமாகில் அவைகள் இஸ்பிரீத்துசாந்துவானவருடைய உதவியினுல் எவ்வளவு திறமையாகப் பெரும் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்துள்ளன என்பதைக் காணமுடியும்.

எவ்வித பிரச்சினைகள் இருப்பினும் யேசுக்கிறிஸ்துநாதருடைய ஞானச்சரீரமாகிய திருச்சபையில் இருக்கும் விசுவாசிகளை நல்வழியில்இட்டுச்செல்ல பொதுச்சங்கங்கள் என்றும் உதவி வந்திருக்கின்றன. வெகுவிரைவில் வரப்போகும் பொதுச்சங்கத்திலுலும் மக்கள் மிகுந்தபலனை அடையவேண்டுமென நாம் பிரார்த்திப்போமாக.

## 2-ம் வத்திக்கான் திருச்சங்கத்தின் சித்திக்காகச் செபம்

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே! உமது பிரசன்னத்தினுலும், உறுதியான வழிநடத்துதலினுலும் திருச்சபையோடு என்றுமிருக்கும்படி யேசுவின் நாமத்தினுல் பரமபிதாவினுல் அனுப்பப்பட்டவரே! திருச்சபையின் பொதுச்சங்கத்தின்மேல் உமது நிறைவான வரங்களைப் பொழிந்தருளும்படி தேவரீரை இரந்து மன்ருடுகிறோம்.

எமது மதுரமான ஆறுதலும், ஆசிரியருமானவரே! பரிசுத்த பாப்பரசரின் அழைப்புக்கிணங்கி உரோமாபுரியில் திருச்சங்கங்கூட மகிழ்ச்சியுடன் வந்துசேரும் ஆயர்களின் மனதுகளை உமது தெய்வீக பிரகாசத்தால் நிரப்பியருளும்.

இத்திருச்சங்கத்தின் விளைவாகச் சுவிசேஷத்தின் ஒளியும், பலமும் உலகமக்களிடையே அதிகமதிகமாய்ப் பரவவும், கத்தோலிக்கவேதமும் அதைப்பரப்பும் பணியும் இனிதே வளம்பெறவும், திருச்சபையின் போதனையும், நல்லொழுக்க வழிகாட்டுதலும் எல்லோராலும் பூரணமாய் ஒப்புக்கொள்ளப்படவும் வேண்டுமென்று தேவரீரை மன்ருடுகிறோம்.

எமது ஆத்துமத்தின் மதுரமான வழிகாட்டியே! நாங்கள் மனத்தாழ்ச்சியும், அமைச்சலும் உள்ளவர்களாயிருக்கவும் திருச்சங்கத்தின் முடிவுகளை நன்றிநிறைந்த மனதுடன் ஏற்று, அனுசரிக்க ஆசைப்படவும் எங்கள் மனதைச் சத்தியத்தில் உறுதிப்படுத்தியருளும்.

கிறிஸ்துநாதருடைய பெயரில் பெருமை பாராட்டிக்கொண்டு அவரால் நிறுவப்பட்ட ஏகமந்தையைவிட்டு இன்னும் பிரிந்து நிற்பவர்கள் கடைசியாய் ஒரே மேய்ப்பனின்கீழ் ஒற்றுமையைக் கண்டடையச் செய்தருளும்படி மன்ருடுகிறோம்.

முன்னொருநாள் பெந்தெக்கோஸ்துதினத்தில் தேவரீர் புரிந்த அற்புதங்களை எங்கள் காலத்திலும் இன்னொருமுறை செய்தருளும்படி கெஞ்சி மன்ருடுகிறோம். உமது திருச்சபை யேசுநாதருடைய தாயாரான பரிசுத்த கன்னிமரியம்மாளுடன் தளராத வேண்டுதலில் ஒன்றித்திருப்பதாலும், அர்ச். இராயப்பரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதாலும், எமது திவ்விய இரட்சகரின் இராச்சியம்—உண்மையினும், நீதியினும் அன்பினும் சமாதானத்தினும் இராச்சியம்—உலகெங்கும் பரவச்செய்தருளும் சுவாமி, ஆமென்யேசு.

குறிப்பு : இச்செபத்தைப் பத்தியுடன் செபிப்போர் அடையக்கூடிய பலன்களாவன :

1. பத்துவருட அபூரணபலன். (ஒவ்வொரு முறையும்)
2. நாள்தோறும் ஒருமாதமளவாகச் செபித்தால் (வழமையான நிபந்தனைகளுக்கிணங்க) ஒரு பரிபூரணபலன்.

# இருளில் ஒளி

## — 27 —

**திரு. டோசன் மாஜில் எழுதுவது :**

வண. டேன் குரவரைக் காண்பதற்காகக் காத்திருந்தார் உயர்ந்து வளர்ந்த இளைஞரொருவர். வேண்டுதல்கள் முடிவடைந்ததும் குரவர் அவ்விளைஞரைத் தமது படிப்பறைக்கு அழைத்துச் சென்ருர்.

தந்தையே, அண்மையில் எனது நெருங்கிய நண்பனொருவன் வியாதியாக வீழ்ந்தானெனக் கேள்வியுற்று அவனைக் காண்பதற்காக விரைந்து சென்றேன். "நண்பா, எனது சிநேகிதிகள் சிலரை இவ்வார இறுதியில் எனது பெரிய மோட்டார் வாகனத்தில் மற்ெருரு இடத்துக்கு அழைத்துச்செல்வதாக வாக்களித்திருந்தேன். மருத்துவரோ இருவாரங்கட்கு யான் படுக்கையைவிட்டகலக்கூடாதெனத் தெரிவித்துள்ளார். எனக்காக நீ அச்சிமாட்டிகட்கு உதவுவாயா" என்று வினவினுன் எனது நண்பன்.

"நல்லது, நீர் உமது நண்பனின் கோரிக்கையை நிறைவேற்றினீரா" என வினுவினுர் குரவர்.

"நல்ல கேள்வி கேட்டீர்கள்? எனது சிநேகிதன் இளைஞன். அவனது தோழிகளும் இளம் வாலைகளாகவே இருக்கவேண்டும். அவர்கட்கு உதவ எனக்குநேர்ந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாதிருப்பேனு? நண்பரின் மோட்டார் வாகனத்துடன் குறிப்பிட்ட முகவரிக்குச் சென்றபோது தான் அதிர்ச்சியடைந்தேன். அங்கு ஆறு இளம் கன்னிகாஸ்திரிகள் காத்துநின்றனர். நண்பன் சமுகமளிக்காத காரணத்தை விளக்கினேன். அநாவசியமாக எனக்குத் தொல்லையளிக்க அவர்கள் விரும்பவில்லை. எனினும், நண்பனுக்களித்த வாக்கை மீற யான் விரும்பவில்லை. அக்கன்னியர்களை அவர்கள் குறித்த இடத்துக்கு அழைத்துச் சென்றேன்.

"என் வாழ்நாளிலேயே மனப்பாக்கியம் நிறைந்த சிலரைக் காண நேர்ந்தது அன்றுதான். அக்கன்னியரின் புன்னகை பொலிந்த வதனங்கள், கள்ளமில்லா உள்ளத்தைக்காட்டும் களங்கமற்ற சிரிப்பு, கண்ணியம்நிறைந்த பண்பாடு, கட்டுப்பாடமைந்த பேச்சு அனைத்தும் என்னுள்ளத்தை ஆட்கொண்டன. அத்தினத்திலிருந்து அக்கன்னியரின் திருவேதம்பற்றி அறிய ஆவலுள்ளவனுனேன்" எனக் கூறிமுடித்தார் அவ்விளைஞர். குரவரும் கத்தோலிக்க போதனையை ஆரம்பித்தார். சிலவாரங்களின் பின்னர் இளைஞரும் அக்கன்னியரின் மறையில் அங்கம்பெற்ருர்.

— சா .பெ.

# பேசும் பேனு

சென்ற திங்கட்கிழமை இரவு முக்கியமான அலுவல்காரணமாக யானும் சில இளைஞர்களும் பிரதான வீதியினூடாகச் சென்றுகொண்டிருந்தோம். நள்ளிரவு ஒருமணி இருக்கும். வீதியின் மத்தியில் துவிச்சக்கர வண்டியொன்று கிடந்தது. மின் விளக்கினுதவியுடன் கவனித்தோம். பக்கத்தில் ஒருவர் சுயநினைவற்றுக் கிடந்தார். குடிபோதை. ஆடைகள் அலங்கோலமாகக் கிடந்தன. வாயினுலும், வயிற்றினுலும் கழிச்சல் வேறு.

அவரைத் தட்டியெழுப்பி அனுப்புவது பெரும் வில்லங்கமாகி விட்டது. துவிச்சக்கரவண்டியையும் தள்ளிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடிச்சென்ருர். வழியில் என்ன பாடுபட்டாரோ? மதுவின் மகிமையை என்னென்பது?

* * *

யப்பானிய தேசத்தில் குடிகாரர்களைப் பொலீஸ் நிலையத்துக்கு இழுத்துச் சென்று, அவர்கள் போதையில் புலம்புவதையெல்லாம் நாடாவில் பதிவுசெய்வார்களாம். அடுத்த தினத்தில் இவர்களைத்தனியறையில்வைத்து, நாடாப்பதிவை மீண்டும் மீண்டும் ஒலிபெருக்குவார்களாம். குடிகாரர்கள் இனிமேல் போதைஉண்டாகும்வரை குடிப்பதில்லையென ஆணையிடும்வரை இங்ஙனம் நடக்கும்.

எங்களுடைய புலம்பலை நாங்களே மீண்டும் மீண்டும் கிரகிப்பதைவிடப் பெரிய தண்டனை வேறில்லை என இத் தண்டனையைப் பெற்ற குடிகாரர்கள் கூறுகின்றனராம்.

* * *

வெளிநாட்டிலுள்ள அன்பரொருவர் அழகிய கைக்கடக்கமான தினக்குறிப்புப் புத்தகமொன்றை எனக்கு அனுப்பியிருக்கிறுர். கத்தோலிக்கர்களின் பாவனைக்கெனத் தயாரிக்கப்பட்டது அது. உள்ளே முகப்புப்பகுதியில் அச்சிடப்பெற்றிருந்த வாக்கியங்கள் என் கருத்தைக் கவர்ந்தன. அவை :

**"நான் ஒரு கத்தோலிக்கன். எனக்கு ஆபத்துநேர்ந்தால் அண்மையிலுள்ள கத்தோலிக்க குரவரொருவருக்குத் தயவுசெய்து உடன் அறிவியுங்கள்."**

ஆபத்துகள் எந்நேரமும் எமை அணுகலாம். விபத்துநிறைந்த பிரயாணங்கள் இன்று சர்வசாதாரணம். எனவே, பிரயாணத் தருணங்களில்

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்புத் தம்பி தங்கையரே!

அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஒருவர் சில எறும்புகளை அவதானித்தார். எறும்பு ஒன்று தனது இரையை இழுத்துச் செல்வதைக்கண்டு அது இழுத்துச் சென்ற இரையையும், அந்த எறும்பையும் தனித்தனியே நிறுத்துப் பார்த்தார். எறும்பின் நிறையைவிட அது இழுத்துச் சென்ற இரை 10மடங்கு என்பதை அறிந்த அவர், இந்த அற்ப உயிர் இவ்வளவு முயற்சியுடன் தனது உணவைத் தேடுமாயின், ஆறறிவுள்ள மனிதன் தனது வாழ்க்கையில் எவ்வளவு முயற்சியுடையவனாக இருக்கவேண்டும் என்று சிந்தித்தார். இந்தஎறும்பைப்போல நீங்களும் உங்கள் வாழ்க்கையில் எல்லாக் காரியத்திலும் முயற்சியுடையவர்களாயிருங்கள்.

அன்புள்ள அண்ணா

—(⌣)—

## நிர்மலன்

நீலக் கடற்கரையோரம், மணல் பரந்து செறிந்திருந்தது. கடற்கரையிலிருந்து சுமார் கால்மைல்தூரம் நடந்துவந்தால் கடற்றொழிலாளருக்கு அரசாங்கம் கட்டிக்கொடுத்த சிறியவீடுகள். அந்தவீடுகளில் ஒன்றுதான் சிறுவன் நிர்மலனின் வீடு. சிறியவீடுதான். ஆனுல், கல்லால் சுட்டப்பட்டது. கூரை ஓடால் வேயப்பட்டது. அரசினர் வெள்ளையடித்துக் கொடுத்தபின் இப்போது 10வருடங்கள் ஆகியும் திரும்ப வெள்ளையடிக்கப்படவில்லை. மற்றவீடுகளைப்போல் தட்டுமுட்டுக்களோ, ஆடம்பரப் பொருட்களோ அங்கில்லை. அது ஒரு வறியவீடு.

சிறுவன் நிர்மலனின் தந்தை ஒரு குடிகாரன். கட்டுப்பாடு இல்லாதவன். அவனது குடிதான் அக்குடும்பத்தைக் குட்டிச்சுவராக்கியது. உழைப்பதும் குடிப்பதும், சூதாடுவதும் அவனது இரத்தத்தோடு கலந்த பழக்கமாகிவிட்டது. அதை மாற்ற அவன் மனைவி அரும்பாடுபட்டாள். முடியவில்லை. நிர்மலனுக்கு ஐந்து வயதாயிருக்கும் போதே மனவருத்தம் அவளை இவ்வுலகில் நின்றே எடுத்துவிடக் காலனாகவந்தது. அவள் விட்டுச் சென்ற அன்புச்சின்னம் இன்று அல்லற்படுகிறான். குழந்தைப்பாசம் மகனின் எதிர்கால வாழ்வு—அவனுடைய நல்லசுபீட்சம்பற்றி தந்தை சூசைநாதனுக்கு அக்கறையில்லை.

தனது தாயாரின் நச்சரிப்புக்காக நிர்மலனைப் பாடசாலைக்கு அனுப்பினான் சூசைநாதன். இப்பொழுது நிர்மலன் 5-ம்வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். நிர்மலனுக்குப் 10வயது. பேருக்கேற்ப அவன் களங்கமற்ற சிறுவன். தாய்ப்பாசம் இன்னதென்று அறியாமல் வளர்ந்தவன். பாட்டியின் அரவணைப்பும் இப்போது அவனுக்கில்லை. அவளும் தள்ளாப் பராயமாகிக் கண்ணைமூடிவிட்டாள். அவனது ஒரேயொரு ஆறுதலும் அவனுக்குக் கிட்டாது போய்விட்டது.

வீட்டுவேலைப்பழு நிர்மலனின் தலையில் விழுந்தது. தந்தைக்கும் தனக்குமாக அதிகாலையில் எழுந்திருந்து சமையல்செய்து சாதங் கட்டி, கடற்கரைக்கு அனுப்பி வைத்துவிட்டே அவன் பாடசாலைக்குப் போவான். இவன் பாடசாலைக்குப் பிந்திவந்தமையால் அவனது வகுப்பாசிரியர் ஒருநாள் சீறிவிழுந்தார்; பலநாட்களாக ஆசிரியர் கொடுத்த தண்டனையைப்பொறுத்துக்கொண்டு இருந்தவன் அன்றுதான் உள்ளக்கதவைத்திறந்து தனது நிலையை எடுத்துரைத்தான். தவிர்க்கமுடியவில்லை அவனுக்கு.

அன்று சமையல்முடித்துப் பாடசாலைக்குப் புறப்பட்டான் நிர்மலன். பள்ளிக்குப்போனது போதும், இனித்தொழிலுக்குப் போவோம் வா என்று அழைத்தான் சூசைநாதன். மாட்டேன், நான் படிக்கப் போகிறேன். கல்வியில்லாமல் நீங்கள் படும்பாட்டை நானும் இனி மேல்பட முடியாது என்று மறுத்தான் நிர்மலன். அடித்தான, உதைத்தான் சூசைநாதன். மைந்தன் என்றும் பாராமல் அக்கருமி அவனை கொர கொர என நாய்பிடிகாரர் குட்டை நாய்களை இழுத்துச் செல்வதுபோல் இழுத்துவந்தான் கடற்கரைக்கு. அழுதான், புரண்டான் நிர்மலன். கடற்கரையில் தொழிலுக்குப்போக ஆயத்தமாயிருந்த இதரதொழிலாளிகள்—உறவினர்தான்—இக்காட்சியைக்கண்டு உள்ளம் கசிந்து சூசைநாதனின் கொடுமையைக்கண்டித்து அவனுக்குப் புத்திசொல்லி நிர்மலனை விடுவித்தனர்.

நிர்மலன் பாடசாலைக்குப் போய்க் கொண்டுதான் வந்தான். ஆனுல், படிப்புக்கு வேண்டிய புத்தகங்களோ, பென்சில், கொப்பி, போன்ற உபகரணங்களையோ வாங்கிக் கொடுக்கமாட்டான். இரவுவேளையிலும், மாலையிலும் அவனுக்குப் படிக்க நேரமிராது. வலைகளைப் பழுதுபார்ப்பது, காயவிடுவது, மடித்துவைப்பது, வள்ளம்துப்புரவாக்குவது, மீன்வாங்கும் வாடிக்கைகாரரிடம் சென்று வாடிக்கைப் பணம் வசூலிப்பது போன்ற சில்லறைவேலைகள் பார்க்கவே நேரமாகிவிடும். இரவு உணவு சமைப்பதும் அவனது வேலைதான்.

எப்படி இருப்பினும் நிர்மலன் வகுப்பில் கெட்டிக்காரன். நல்ல ஞாபகசக்தியும், கிரகிக்கும் திறனும் அவனுக்கிருந்தது. இதனுல் வகுப்பாசிரியர் அவனில் அதிகபட்சமாயிருந்தார். நிர்மலனுக்கு வேண்டிய புத்தகங்களைக்கூட அவரே வாங்கிக் கொடுத்தார். சிலசமயங்களில் நிர்மலனின் திறமையையும் அவன் பிற்காலத்தில் சிறப்படையக்கூடிய தன்மையையும் எடுத்துக்கூறினுர் ஆசிரியர் சூசைநாதனுக்கு. ஆனுல், அவையாவும் அவனுக்கு நாராசம் போலிருந்தன.

நிர்மலன் பாடசாலைக்குப் போகும் வழியில் ஓர் மாதாகோவில் இருந்தது. நிர்மலனின் தாயாரும், பாட்டியும் அவனுக்குத் தேவதாயின்மேல் அன்பையும், அபிமானத்தையும் மூட்டிவிட்டிருந்தனர். எப்பொழுதும் அவன் பாடசாலைக்குப் போகும் போதும், பாடசாலையிலிருந்து வரும்போதும் தேவதாயாரிடம், தனது உயர்வுக்காகவும், தந்தையின் மனமாற்றத்துக்காகவும் மன்றாடுவான். கவலை அதிகமானுல் மாதா சொரூபத்தின் முன் நெடுநேரம் முழங்காலிலிருந்து கண்ணீர்விட்டு அழுவான்.

வகுப்பில் அவனது திறமையைக் கண்டு அவனுக்கு உதவிசெய்ய மனங்கொண்ட வகுப்பாசிரியர், மேற்றிராணியார் வறியமாணவர்க்குக் கொடுக்கும், இலவச உயர் படிப்புசலுகையை நிர்மலனுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று ஆவல் உடையவரானுர். இலவச உயர்கல்விக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் பரீட்சை அவ்வருடம் ஐப்பசிமாதத்தில் நடைபெறவிருந்தது. அதற்குரியவிண்ணப்பப் பத்திரத்தில் நிர்மலனுடைய பெயரையும் சேர்த்துக்கொண்டார்.

பரீட்சைக்கு நாளுங்கிட்டியது. அன்று வியாழக்கிழமை. மறுநாள் பரீட்சை அல்லவா? பரீட்சைக்கு உடுக்க நல்ல உடை வேண்டாமா? பரீட்சை என்றுல் எல்லா மாணவரும் தத்தம் நிலைக்கேற்ப சிறப்பாக உடுத்து வருவார்கள் அல்லவா? நிர்மலனிடம் புதியசட்டைகள் இல்லை முதல்நாள் உடுத்த—இல்லை இப்பொழுதும், எப்பொழுதும் உடுக்கும் ஒரே சட்டைதான் இருந்தது. அழுக்கேறி, கிழிந்திருந்த அதை எப்படி உடுத்துவது. அவனுக்குப் புதியதோர் யோசனை தோன்றியது. தனது தகப்பனுரின் உடுப்புப்பெட்டியை ஆராய்ந்து பார்த்தான். ஒரு பட்டுச்சால்வை தென்பட்டது. அதை உடுத்துப் போகலாம்என முடிவுகட்டினுன். முதலில் ஒருமுறை அதை உடுத்துப் பார்த்தால் என்ன என்ற ஆசையினுல் உந்தப்பட்டு அதைஉடுத்தி அழகுபார்க்கும்பொழுது அவனது தந்தை சூசைநாதன் உள்ளே வந்தான், நிர்மலன் உடுத்திருந்த சால்வையை ஒரே உலுக்காக இழுத்துப் பெட்டியில் வைத்தான். நிர்மலன் என்னகூறியும் அவன் கேட்கவில்லை. "நீ பரீட்சைக்குப் போகக்கூடாது" என்று அதட்டினுன். கலங்கிய கண்களுடன் நித்திரைக்குச் சென்றுன் நிர்மலன்.

மறுநாள் விடிந்தது. நிர்மலன் வழமையான வேலைகளை அவசர அவசரமாய் முடித்துவிட்டுப் புறப்பட ஆயத்தமானுன். அவ்வேளை கடலிலிருந்துதிரும்பிய சூசைநாதன் இந்த மீன்களை வாடிக்கைகாரரிடம் கொடுத்துவிட்டுவா; பரீட்சைக்குப் போகக்கூடாது என்று கண்டிப்பாகக் கூறினுன். இம்மொழிகள் பிஞ்சு உள்ளத்தில் இடியோசைபோல் ஒலித்துக் கலக்கியது.

தந்தை சொற்படி வாடிக்கைகாரருக்கு மீன்கொடுத்துவிட்டுப் பாடசாலைக்கு ஒரேஓட்டமாய் இளைக்க இளைக்க ஓடினுன் நிர்மலன் அதோ பரீட்சைக்காகப் பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு பஸ்புறப்பட்டு ஓடிக் கொண்டிருந்தது வெகுதொலைவிலே. நிர்மலன் ஓடினுன் ஓடினுன் மூச்சுத்திணற ஓடினுன். சிறுவனுக்கு விரைவாய்ஓடும் பஸ்ஸைப் பிடித்துவிட முடியுமா?

நடுவழியில் மூர்ச்சித்து விழுந்து விட்டான். அப்பொழுதுதான் அவ்வழியாக மோட்டாரில் வந்துகொண்டிருந்த விசாரணைப்பங்கு கட்டளைக்குரவர் அமலதாஸ் சிறுவன் நடுவழியில் விழுந்துகிடப்பதைக் கண்டார். திடீரெனக் காரைநிறுத்தினுர். சிறுவனை நிழலான இடத்துக்குத்தானுகவே தூக்கிச்சென்று அவனுக்கு முதலுதவி செய்தார். சிலநிமிடங்களில் மூர்ச்சை தெளிந்தான் நிர்மலன். தனக்கு நிகழ்ந்த விபத்து எல்லாம் அவனுக்கு கனவுபோலிருந்தது. என்ன நடந்தது எங்கு இருக்கிறேன் என்று வினுவினுன்? குருவானவர் சம்பவத்தைக்கூறினுர். நிர்மலன் தனது நிலையை எடுத்துரைத்தான். பரீட்சை தொடங்க 15நிமிடங்களே இருந்தன. குருவானவர் நிர்மலனுக்கு தையற்கடை ஒன்றில் உடுப்புகள் வாங்கிக் கொடுத்து, பரீட்சை நடக்கும் கல்லூரிக்குத் தனது மோட்டாரிலேயே அவனை அழைத்துச் சென்றுர்.

நிர்மலன் பரீட்சையில் முதலாவதாக நின்றுன். குருவானவரின் சிபார்சுக் கடிதத்துடன் மேற்படிப்புக்காக கல்லூரியில் சேர்க்கப்பட்டான். குருவானவரே சூசைநாதனிடம்சென்று பரீட்சை எழுத ஆவல்கொண்ட நிர்மலன் எவ்வாறு தன்னுல் காப்பாற்றப்பட்டான் என்பதையும், அவனது மூடத்தனத்தால் சிறுவன் அநியாயமாய் இறந்திருப்பான் என்பதையும், சூசைநாதனுக்குக்கூறி, அவன் வாழ்க்கை உயர்வடைய வேண்டிய புத்திமதிகள் புகன்றுர். சூசைநாதன் அன்று முதல் நல்லவனுய் நடந்து தனது பழையகால வாழ்க்கைக்குப் பிராயச்சித்தம் செய்தான். நிர்மலன் தனது எண்ணம் நிறைவேறியமைக்கும், தகப்பனின் மனமாற்றத்துக்கும் தேவதாயாருக்கு நன்றி கூறினுன்.

மேரி யசிந்தா
கரம்பொன்

---

## உத்தரிய மாதாவின் கருணை

இஸ்பானிய தேசத்தில் தொளோசா என்னும் நகரில் தேவமாதா சாமுவேல் என்னும் ஓர் ஐசுவரியவானுக்குத்தரிசனையாகித் தனதுபேரில் ஒரு மடத்தைக் கட்டி உத்தரியமாதா சபைக்குக் கொடுக்கும்படி கேட்டார்.

இதை அறிந்த அந்தஊர் அதிபதி அதை எதிர்த்து அவர்களை நாடு கடத்த முயன்றுன். ஆனுல், அக்கன்னியர்கள் அவனது கட்டளையைப் பொருட்படுத்தவில்லை. இதைப் பொறுக்காத அந்த அதிபதி அம்மடத்தைச்சுற்றி ஒரு மதிலைக்கட்டி எழுப்பியபோது அது இடிந்துவிழுந்தது. அதேவேளையில் அவனுடைய கண்விழிகள் இரண்டும் வெளியே வந்து தொங்கின. பிழையை உணர்ந்த அந்த ஊர் அதிபதி கன்னியர்களிடம் பொறுத்தல் கேட்டான்.

அவர்கள் உத்தரியமாதாவின் சுரூபத்தை நோக்கி: "கிருபைதயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க!" என்ற சங்கீதத்தைப் பாடினுர்கள். "உம்முடைய தயாளமுள்ள திருக்கண்களை எங்கள்பேரில் திருப்பியருளும்" என்று பாடியவுடன் வெளியே தொங்கிக்கொண்டிருந்த நகராதிபதியின் கண்கள் இரண்டும் உள்ளே சென்று நல்ல பார்வை அடைந்தான்.

உடனே அவன் அவர்களின் கால்களிலே விழுந்து மன்னிப்புக்கேட்டு, அவர்கள் அம்மடத்தில் தங்குவதற்கு உத்தரவு அளித்தான்.

எஸ். எமல்டா,
கார்மேல் பாடசாலை,
அம்பிற்றியா,

---

## நன்றித்துதி

இரக்கமுள்ளயேசுவின் திருஇருதயமே உம்மில் நம்பிக்கைவைத்தஎன்னை நீர் கைவிடவில்லையே! எத்தனையோமுறைகளில் நான்தான் உம்மைப் புறக்கணித்தேன். நீர்என்னைப் புறக்கணிக்கவேயில்லை. அன்புள்ள திருஇருதயமே, உம்மிலேயே என் நம்பிக்கை எல்லாம் வைத்தேன்.

யேசுவின் திருஇருதயத்திடமும், பரிசுத்த தேவதாயார், கோடிஅற்புதரும், துக்கித்தவனதுகளைத் தேற்றுகிறவருமான அர்ச். அந்தோனியார், அர்ச். சின்னத்திரேசம்மாள், அர்ச். யூதாததேயு என்பவர்களிடமும் நாங்கள்இரந்து கேட்ட மன்றாட்டுகள் கிடைக்கப்பெற்றேும். நேர்த்திப்படி நன்றியறிதலின் அடையாளமாக இதைப்பிரசுரிக்கிறேன். யேசுவின் திருஇருதயமே நீரே என்எக நம்பிக்கை.

திருஇருதய பக்தன்
தலைமன்னுர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொலம்பகம் அர்ச். சூசையப்பர் ஆசிரியகலாசாலையில் பிரிவுபசாரக் கொண்டாட்டம்

அன்று புதன்கிழமை (31-1-62) கொலம்பகம் அர்ச். சூசையப்பர் ஆசிரியர் கலாசாலையின் சரித்திரத்திலே மறக்கமுடியாத ஒருதினம். கலாசாலை அபிவிருத்திக்குக் காரணமாக விளங்கிய முத்தூண்களாகிய அதிவண. வ. தியோகுப்பிள்ளை, அதிபர் அடிகளும், சங். தாயார் சென் பீற்றர், சங். சிஸ்டர் சில்வேரியா அவர்களும் கலாசாலையை விட்டுப்பிரிந்த ஒரு துக்கதினம்.

அன்று பி. ப. 3-30 மணியளவில் பிரியாவிடைவைபவம் கலாசாலைக் கீதத்துடன் ஆரம்பமாகியது. வண. ஐயாத்துரை அடிகளும், போசிரியர்களும், ஆசிரிய மாணவ மாணவிகளும் சென்றவருடம் பயிற்சிமுடித்து வெளியேறிய ஆசிரியர், ஆசிரியைகளும் சாதனு பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். முதன்முதலாக மாணவ உதவித்தலைவர் திரு. அ. இராசேந்திரம் அவர்கள் பிரியாவிடை நாயகருக்கு ஆசிரிய மாணவ, மாணவிகளின் சார்பில், ஞானப் பூச்செண்டளித்தார். தொடர்ந்து சாதனுபாடசாலை மாணவர்கள், ஆசிரியமாணவிகள், ஆசிரியமாணவர்கள் முறையே பிரியாவிடைக் கீதங்கள்பாடினர்.

பின்னர் போசிரியர்களின் சார்பில் திரு. சூ. செல்வநாதர் அவர்களும், சாதனுபாடசாலை ஆசிரியர்களின் சார்பில் தலைமைஆசிரியர் பண்டிதர் அ. யோசேப் அவர்களும், ஆசிரிய மாணவர்களின்சார்பில் திரு. அ. இ. சிறில் அவர்களும், ஆசிரிய மாணவிகளின் சார்பில் செல்வி யோசேப்பின் லெம்பேட் அவர்களும், பழையமாணவர்களின்சார்பில் ஆசிரியர் ம. விக்றர் அவர்களும், பழையமாணவிகளின் சார்பில் செல்வி மக்டலின் சின்னப்பு அவர்களும், சாதனுபாடசாலை மாணவர்களின் சார்பில் செல்வன் செ. சந்திரன் என்பவரும் அதிபர் அடிகளின் அளப்பரிய சேவைகளையும், அன்னாரின் அன்பு, பக்தி, கடமையுணர்ச்சி, போன்ற பண்புகளையும் பல்வேறு விதமாகப் பாராட்டிப் பிரியாவிடை கூறினர். அதன்பின்பு மாணவதலைவர் திரு. வ. மலக்கியாஸ் பறணுந்து அவர்களால் மாணவ மாணவிகளின் சார்பில் பிரியாவிடை நாயகருக்கு அன்பளிப்பு அளிக்கப்பட்டது.

அடுத்து பிரியாவிடைநாயகர் அதிவண. வ. தியோகுப்பிள்ளை அடிகள் கண்ணீர் ததும்பச் சொற்பொழிவாற்றிய காட்சி யாவரையும் சோகவெள்ளத்தில் மூழ்கடித்து, மண்டபம் முழுவதும் கண்ணீர்க் கோலமாகவே காட்சியளித்தது.

'எல்லாம் கடவுளின் சித்தம்—அவரிலேயே நாம் முழுநம்பிக்கையும் வைக்க வேண்டும். நல்லாயனும், மெய்ப்பனுமாகிய கடவுள் ஒருபோதும் எம்மைக் கைவிடமாட்டார்'' எனத் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

சமயக் கல்வி கற்பிக்கும்போது அடிக்கடி சின்னப்பர் எழுதிய நிருபங்களை வாசித்து விளக்கும் அடிகள் தமது கடமை முற்றுப்பெறும் அவ்வேளையிலும் சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் பின்வரும் பகுதியை (4: 4-9) வாசித்துச்சாந்தி கூறினர். "ஆண்டவரிடத்தில் எப்போதும் சந்தோஷமாயிருங்கள்; மறுபடியும் சொல்லுகிறேன்: சந்தோஷமாயிருங்கள். உங்கள் அடக்கவொடுக்கம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக; கர்த்தர் அருகில் இருக்கிறார். எதன்பேரிலும் கவலைப்படாதிருங்கள். ஆனால், எல்லா ஜெபத்திலும், வேண்டுதலிலும் நன்றியறிந்த ஸ்தோத்திரத்தோடுகூடிய உங்கள் மன்றாட்டுகள் தேவசமுகத்தில் தெரியவாக்கடவது. அப்படியே எல்லா அறிவையுங் கடந்த சர்வேசுரனுடைய சமாதானமானது உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் யேசுக்கிறிஸ்தவுக்குள் காப்பாற்றுவதாக. கடைசியாய்ச் சகோதரரே, எதெது உண்மையோ, எதெது யோக்கியமோ, எதெது நீதியோ, எதெது பரிசுத்தமோ, எதெது அன்புக்குரியதோ, எதெது நற்கீர்த்திக்குரியதோ, எதெது புண்ணியமோ, எதெதுநல்லொழுக்கபுகழ்ச்சியோ, அவைகளைச் சிந்தித்துக் கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் எவைகளைக் கற்றும், பெற்றும், கேட்டும், கண்டுமிருக்கிறீர்களோ, அவைகளையே செய்யுங்கள். அப்போது சமாதானக் கடவுள் உங்களோடிருப்பார்''

அதன் பின்னர் மாணவமன்றக் காரியதரிசி திரு. எச். யோசேப் லோ அவர்களால் நன்றியுரை கூறப்பட்டது. அடுத்து பாப்பரசர்கீதம் பாடப்பட்டுப் பிரியாவிடைநாயகரின் பூங்கா ஆசி பெற்று விழாமுற்றுப்பெற்றது.

பின்னர், ஆசிரியமாணவ மாணவிகள் சங். தாயார் சென்பீற்றர், சங். சிஸ். சில்வேரியா அவர்களையும் மடத்தில் சந்தித்துப் பிரியாவிடைகூறினர்.

# ஞானேபதேசப் பாடநூல்கள்

| | | |
|---|---|---|
| 2-ம் வகுப்பு — முதல்நன்மைக் குறிப்பிடம் | | 40 |
| 3-ம் வகுப்பு — சிறுவர் குறிப்பிடம் | | 60 |
| 4-ம் வகுப்பு — சின்னக் குறிப்பிடம் (1-ம் பாகம்) | | 80 |
| 5-ம் வகுப்பு -- சின்னக் குறிப்பிடம் (2-ம் பாகம்) | | 80 |
| 6-ம் வகுப்பு — பெரிய குறிப்பிடம் (1-ம் பாகம்) | | 75 |
| 7-ம் வகுப்பு — பெரிய குறிப்பிடம் (2-ம் பாகம்) | | 75 |
| 8-ம் வகுப்பு — பெரிய குறிப்பிடம் (3-ம் பாகம்) | | 75 |
| G. C. E. Prep. | 1. அர்ச். மத்தேயு சுவிசேஷம் | 1-50 |
| | 2. மாணவர் கிறிஸ்தவபோதகம் (1) | 1-25 |
| G. C. E. | 1. அர்ச். லூக்கா சுவிசேஷம் | 1-25 |
| | 2. என் விசுவாசம் | |

மனேஜர்:

**அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,**

**யாழ்ப்பாணம்.**

● எலிசபேத்மகாராணியார் 1952-ம்ஆண்டு மாசிமாதம் 6-ந்திகதியன்று தம்முடையதந்தையாரான ஆறுவதுஜோர்ஜ்அரசரிடமாக இரண்டாவதுஎலிசபேத் இராணியார்எனும் நாமத்துடன் சிம்மாசனமேறினர். அதனுல் அவர்சிம்மாசனமேறிய பத்தாம்ஆண்டு நிறைவுதினம் இம்மாதம் 6-ந்திகதியாகிய செவ்வாய்க் கிழமை வரலாயிற்று.

# முதல்வருட மரண ஞாபகம்

ரெஜினு தலிமா

பேசாலை

**தோன்றல்:** 1-4-1928.

**மறைதல்:** 5-2-1961.

"என் ஆண்டவரே! என் ஆசைகளெல்லாம் உமக்குத் தெரிந்திருக்கிறது. என் பிரலாபம் உமக்கு மறைந்திருக்கவில்லை."



†

R. I. P.

கருணும்பர சேசுவே! ஆத்துமாக்களை நேசிக்கிறவரே! தேவரீருடைய திவ்விய இருதயமானது பூங்காவனத்திலும் சிலுவையிலும்பட்ட மரண அவஸ்தையையும் தேவரீருடைய மாசில்லாத திருத்தாயார் அனுபவித்த வியாகுலங்களையும் பார்த்து உமது திருச்சமுகத்திற்கு தேவரீர் அழைத்துக் கொள்ளச்சித்தமான

**ரெஜினு தலிமாவின்**

ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாற அனுக்கிரகித்தருளும்.

[இதைக் கண்ணுறும் விசுவாசிகள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு அன்பாய்க் கேட்டுக்கொள்கிறோம்.]

அருமை மனைவியை இழந்து துயருறும்

**X. F. பங்கிராஸ் பெர்னுண்டஸ்**

அருமைத்தாயை இழந்து பரிதவிக்கும்

**ஜெ, ஜோஸப்பின், கிளாரீஸ், கிறிஸ்டபெல்**

அருமை மருமகளை இழந்து துயருறும்

**D. S. ஜோர்ஜ்: தெரேசம்மாள் பர்னுன்டஸ்**

அருமை மகளை இழந்து பிரலாபிக்கும்

**லூசியா குலாஸ்**

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3840**

வலிகாமம்கிழக்கு ஐக்கியவிலைபொருள் உற்பத்தி விற்பனவுச்சங்கம்.
தற்போது ஆவரங்கால்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
மட்டுப்படுத்தப்பட்ட
உத்தரவாதமுள்ளது — வழக்காளி.
எதிராக, புத்தூர்கிழக்கு
அருணுசலம் கனகசபை முத்துக்குமாரு
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 3840-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆண்டு பங்குனிமீ 17-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,436-ம், 20-1-61தொடக்கம் 31-8-61 வரைக்கும் ரூபா 1,200-க்கு 4வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச் செலவு 171ரூபா 12சதமும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு புத்தூர்தெற்கு, பறையனிருப்பு தோட்டமும் நிலமும். நிலப் பரப்பு $3\frac{3}{4}$. எல்லை: கிழக்கு— மழவராயர் கந்தையா கைம்பெண் வள்ளிப்பிள்ளையினுதனம். வடக்கு — சரவணமுத்து கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு — ...ப்பர் ஆசைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு — வேலன் பெரியானுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். பதிவு K 193/123.

ஆ. ச. இராசேந்திரம்,
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம்.

## நன்றித்துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச் யூதாததேயு இவர்களின் வேண்டுதலாலும் என்மகனுக்குவந்த காய்ச்சல் சுகமடைந்ததற்கும், என்மக்கள்இருவர் பரீட்சையில் சித்தியடைந்ததற்கும், எங்களுக்கு ஓர்மகள் கிடைத்ததற்கும் எங்கள் மனமார்ந்தநன்றியைச் செலுத்துகிறோம்.

ஏ. சி. எஸ்.

கொழும்பு

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3260**

மாவட்டபுரம்
கதிரித்தம்பி நாகலிங்கம் கைம்பெண்
அன்னபூரணம்
— வழக்காளி.
எதிராக, மாவட்டபுரம்
1. வல்லிபுரம் இராசரத்தினமும்
2. பெண் நாகரட்ணம் இருவரும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3260-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக்காணிகளை 1962-ம்ஆண்டு மாசிமீ 24-உ (24-2-62) சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,245. இதற்குத்தீர்வை ரூபா 1,500-க்கு 23-3-60திகதிதொடக்கம், 14-6-60வரை 100-க்கு 8வீதவட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடுமவரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 182ரூபா 50சதமும். இதில் 400ரூபா கொடுபட்டது.

**காணிகள் விபரம்**

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் தெல்லிப்பளைக் கோயிற்பற்றுப்பளை, "தம்பகதம்பி" பரப்பு நிலஇலாச்சம் 4-உம, வீடுகளும், கிணறும், வான்பயிர் செய்பயிர்களும், தெற்கெல்லையிலிருக்கின்ற இலர்தைமரங்களில்பங்கும். எல்லை: கிழக்கு — சண்முகம் தம்பிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் கிழ்க்காணும் 2-ம், 3-ம் காணிகள். வடக்கு — வல்லிபுரம் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரியகாணி. மேற்கு — ஒழுங்கை. தெற்கு — மாவட்டபுரம் ஊர் எல்லை. இதில் மறுகாணிகளுக்குரிய கிணற்றில்பங்கும், வழிவாய்க்காலும் பிறநீங்கலாக. இதில் சொரியலாய் $\frac{2}{3}$பங்கும், வீடுகளும் இந்தப்பங்குக்குச் சேர்ந்தவை. பதிவு இலக்கம் H277/256.

2. மேற்படிஇறை "தம்பகதம்பி" பரப்பு நிலஇலாச்சம் 1-உம், மேற்காட்டிய கிணற்றில்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். எல்லை: கிழக்கும், வடக்கும், தெற்கும் — சுப்பிரமணியம் குமாரசேகரத்துக்கும் பங்காளருக்கும். மேற்கு — மேற்காட்டிய முதலாம்காணி. இது அடங்கலில் சொரியலாய் $\frac{2}{3}$பங்கு. பதிவுஇலக்கம் 277/257.

3. மேற்படி இறை "தம்பகதம்பி" பரப்பு நிலஇலாச்சம் 2-ம், 1-ம் காணியில் இருக்கின்ற கிணற்றில்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புஉரித்தும். எல்லை: கிழக்கு — சுப்பிரமணியம் குமாரசேகரத்துக்கும், பங்காளருக்கும் உரியகாணி. வடக்கு — மேற்காட்டிய இரண்டாம்காணி. மேற்கு — மேற்காட்டிய முதலாம்காணி. தெற்கு — சண்முகம் தம்பிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரியகாணி. இதில் சொரியலாய் $\frac{1}{3}$பங்கு. பதிவுஇலக்கம் 235/185.

சி. செ. மாரிமுத்து,
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்
விதானைவளவு, சித்தன்கேணி,
17-1-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## ருஷியாவில் தேவாலயங்கள் இடிகரையாகின்றன

ருஷியாவில்உள்ள சிலபழைய சந்நியாசமடங்களும், ஆலயங்களும், தரிசகர்களுக்காக புராதன கலைக்கூடங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன. மற்றைய ஆலயங்கள்யாவும் அபாவனைக்குள்ளாகியிருக்கின்றன. பல இடிந்து அழிவுக்குள்ளாகியிருக்கின்றன.

மொஸ்கோவிலுள்ள வெண்காயவுருவான கோபுரங்கள் மையூசியோ, பொற்றகடு பதித்தோ பார்வையாளருக்கெனப் பாதுகாக்கப்படுகின்றன. சாகோர்ஸ்கில் இத்தகைய ஆலயங்களும், மடங்களும் உண்டு. ஆனால், அங்கிருந்து சற்றுத் தொலைவிலுள்ள ரேஸ்ரோவ் கிராமத்தில் கோபுரங்கள் காணப்பட்டாலும் அவை பாதுகாக்கப்படுவதில்லை. அக்கோயில் இப்பொழுது கிழங்குக்கிட்டங்கியாக விருக்கின்றது. வேறுஒருகோயில் நூல்நிலையமாகவும், இன்னொன்று குதிரைலாயமாகவும், வேறுஆலயங்கள் கார்திருத்தும் காராச்சாகவும், கட்சிக்காரியாலயங்களாகவும் உபயோகப்படுகின்றன. யாஸ்லாவில் முற்காலம் 75 சந்நியாசமடங்களிருந்தன, தற்பொழுது 32 உள. ஒன்று மாத்திரம் காட்சிக்கு உண்டு.

## 50 நாடுகளின் கத்தோலிக்க வைத்தியர் மாநாடு

வருகிற ஆடிமாதம் 9-ம் திகதி உவெஸ்ற் மினிஸ்ரரில் சர்வதேசக் கத்தோலிக்கவைத்தியர் மாநாடு ஒன்று நடந்தேறும். இதற்கு 50 நாடுகளிலிருந்து 800 டாக்டர்மார் சமுகமளிப்பர். பிரித்தானியாவில் முதன்முறையாக நடந்தேறவிருக்கும் இம்மாநாட்டிற்கு அங்குள்ள அர்ச். லூக்கா, கொஸ்மா தமியான் வைத்திய சங்கத்தினர் வேண்டிய ஆயத்தங்கள் செய்கின்றனர்.

ஐ. அமெரிக்காவில் இருந்து 100 வைத்தியர் சமுகமளிப்பர். "கத்தோலிக் வைத்தியனும் மாறிவரும் சமூகமும்," என்பதைப் பீடிகையாகக்கொண்ட இம்மாநாட்டில் குமரப் பருவப் பிரச்சினை, வயோதிகர், மனநோய்க்குப் புதுச்சிகிச்சை முறைகள், மாறாத நோய்கள், சுதந்திரம்பெற்ற நாடுகளும் கத்தோலிக்க வைத்தியனும் ஆதியாம் விடயங்கள்பற்றி விரிவுரைகள் நிகழ்த்தி ஆராயப்படும்.

## நீக்கிரேப் பெண் உயர் நியமனம் பெற்றார்

இந்தியானாப் பொலிஸுக்குச் சேர்ந்த ஸ்ரீமதி ஒஸ்மா ஸ்பேர்லொக் அம்மையார் அப்பகுதி சிவில் உரிமைக் குழுவின் உபதலைவராக நியமனம் பெற்றிருக்கிறார். 2,500 பவுண் வேதனத்துக்குரிய இவ்வுத்தியோகமே இப்பகுதியில் நீக்கிரேப் பெண் ஒருத்தி அடைந்த உயர் உத்தியோகமாகும். ஸ்பேர்லொக் அம்மையார் இந்தியானாப் பொலிஸ் கத்தோலிக்க இனத்தொடர்புக் கொம்மிற்றியில் உபதலைவராகவிருந்து செய்த சேவைக்காகச் சென்ற ஆண்டில் பாராட்டும், சன்மானமும் பெறலாயினர்.

## போலந்தில் 5,000 அதிகமான குருமார்

உவார்சோவிலிருந்து வெளியிட்ட தகவலின்படி கடந்த மகாயுத்தத்தின் பின் போலாந்தில் குருமார் தொகை அதிகரித்து இருக்கிறது யுத்தத்துக்கு முன் குருமார்தொகை 9,931 ஆகவிருந்து 1948-ல் 8,618 ஆகக் குறைந்து, தற்பொழுது 13,550 ஆக அதிகரித்திருக்கிறது.

## அங்கிளிக்கன் பாதிரியார் மனந்திரும்பியுள்ளார்

சசெக்ஸ் மாவட்டத்திலுள்ள பின்டனின் அங்கிளிக்கன் பாதிரியாரான ஜேம்ஸ் றுெபின்சன் திருச்சபையில் சேர்ந்திருக்கிறார். 1959 இல் இருந்து விசாரணைசெய்துவந்த தமதுபங்கை "பிரத்தியேக கர்ரணங்களின் நிமித்தம்" இராசினாமாச் செய்வதாகக் கூறினார்.

திரு. றுெபின்சன் அவர்களுக்கு 22 வயதான மகனும், 18 வயதான மகளும் உளர்.

## கியூபா எழுத்தாளன் மரணவேளை மனந்திரும்பினர்

கியூபா எழுத்தாளரும், தமது முதிர் வயதை நாஸ்திகராகக் கழித்தவருமான ஜோர்ச் மனக் என்பார் மரணிக்குமுன் திருச்சபையுடன் சமாதானஞ் செய்துகொண்டார்.

புவெர்ட்டோ றிக்கோ சர்வகலாசாலையின் கத்தோலிக்க தகவல்நிலையத்தின் தலைவர் அன்ரோனியோ குவெடோ, சே. ச. சுவாமியார் தாம் அவருக்கு வழித்துணை நற்கருணையும் அவஸ்தைப் பூசுதலும், கொடுத்ததாகக் கூறினர். மனக்கின் மனைவியுடைய அழைப்பின்பேரில் அவரைச் சந்திக்கச்சென்றசுவாமியார், சொற்பநேரம் அளவளாவியபின் மனக் தாமே "போகுமுன் எனக்குப் பச்சாத்தாபம் தந்துவிட்டுப் போகவேண்டும்" எனக் கேட்டார், எனக் கூறினர்.

கியூபாவின் தேசஅபிமானி யோசெ மார்ட்டி என்பவருடைய சரித்திரத்தை எழுதிப் புகழ்பெற்ற மனக் பப்ரிஸ்டாவின் ஆட்சியின்போது ஸ்பானியாவில் அகதியாய்த் தலைமறைவாயிருந்துவிட்டு, பிடேல் கஸ்திரோ தலைமை பெற்றபோது திரும்பிவந்தார் ஆயினும் அவனுடைய ஆட்சியால் ஏமாந்து விலகிவிட்டார்.

## மிலான் அதிமேற்றிராசனத்தின் செயல்திட்டங்கள்

பரிசுத்த பாப்பரசர் 23-ம்அருளப்பரின் "அன்னையும் ஆசிரியையும்" என்ற சமூகப் பொதுநிருபத்தின் படிப்பினைகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் பொருட்டு மிலான் பட்டணத்தின் அதிமேற்றிராணியாராகிய மகாமேன்மைதங்கிய கருதினல் மொந்தீனி ஆண்டகை அவர்கள் ஓர் சமூகசேவைக் காரியாலயத்தை நிறுவியுள்ளார். இக்காரியாலயம் தொழிலாளர், முதலாளிகள் ஆகியோரின் நலனுக்காக உழைக்க முயற்சிகள் எடுத்துவரும் எல்லாச் சங்கங்களுடனும் ஒத்துழைக்குமென்று தெரியவருகின்றது.

திருச்சபையின் 21 பொதுச்சங்கங்களின் ஞாபகசின்னங்களாக இவ்வருடம்முடியுமுன் 21 புதுத்தேவாலயங்களைக் கட்டியெழுப்ப உதவிபுரியுமாறு கருதினல் மொந்தீனிஆண்டகை தமது ஞானமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த 21 ஆலயங்களும் மிலான்பட்டணத்தின் சனத்தொகை பெருகியதால் உடனடியாகத் தேவைப்படுகின்றன என்று கருதினல் ஆண்டகை தெரிவித்துள்ளார். தென்னமெரிக்காவில் பட்டகோனியா என்ற பிரதேசத்தில் [illegible] வேதபோதகம் செய்துவரும் வண. கார்லோமரியா தூனி சுவாமிகளுக்கு துணைபுரியும்பொருட்டு மிலான் நகரத்துக் கத்தோலிக்கமக்கள் ஓர் ஆகாய விமானம் வாங்கிக் கொடுத்துள்ளனர். அந்தவிமானத்திற்கு "சாந்தா மரியா" என்று பெயரிடப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் இறங்கக்கூடிய ஹெலிக்கொப்டர்என்ற வேறொரு விமானத்திற்கும் நிதிதிட்டும் பொருட்டு "சாந்தா மரியா" என்ற விமானம் அர்ச். சாள்ஸ் பொறெமேயோ தேவாலயத்தின் முன்னுள்ள சதுக்கத்தில மக்களின் கணகாட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## அணுக்குண்டு நிபுணரான கன்னியாஸ்திரி

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சுவண்டன என்ற பட்டினத்திற்கு அருகாமையிலுள்ள சிறு நகரங்களின் அதிகாரிகள் உட்பட அநேகர் அர்ச். அன்னம்மாளின் கலைக் கழகத்தைச் சேர்ந்த சங். சிஸ்ரர் மாத்தா அவர்கள் அணுத் துகள்கள் பற்றி ஆற்றிய சொற்பொழிவைக் கேட்க வந்துகூடியிருந்தனர். இத் துறவறச் சகோதரி அணுசம்பந்தமான விடயங்களிலே ஒரு நிபுணரென மதிக்கப்படுகிறார். அவர் தமது சொற்பொழிவில் கூறியதாவது :-

"ஐம்பது அல்லது நூறு மெகட்டன் அணுக்குண்டுகள் வெறும் பிரசாரக் கருவிகளே". அவைகளுக்கு அஞ்சவேண்டியதில்லை. பத்து மெகட்டன் அணுக்குண்டுகள்தான் மிகப் பொல்லாதவை. அவைக்கே நாம் அஞ்சவேண்டும், ஏனெனில், ஐம்பது அல்லது அதற்கு அதிகமான மெகட்டன் சக்தியுள்ள அணுக்குண்டுகளில் இருந்து எழும்பும் காளான் உருவமுள்ள முகில்கள் பூமியைச் சுற்றியிருக்கும் வாயுத்திரைக்கு மேலாக எழுகின்றன. அவைகளிலிருந்து விழும் துகள்கள் வாயுத்திரையை ஊடுருவிப் பூமியை அடைவதற்குப் பல ஆண்டுகள தேவைப்படும். அதற்குமுன் அவை அணுக்கதிர்களற்றவைகள் ஆகிவிடும். இக்காரணத்தினிமித்தம்தான் திரு. குருஷ்சேவ் எவ்வித அச்சமுமின்றித் தமது சொந்த நாட்டிற்கு மேலேயே பெரிய அணுக்குண்டுகளையெல்லாம் வெடிக்கவைத்தார்."

## லித்துவேனியாவில் இரு குருமார் கைதுசெய்யப்பட்டனர்

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குமுன் சோவியத்ருஷியா இணைத்துக்கொண்ட பால்டிக் தேசங்களில் ஒன்றாகிய லித்துவேனியாவின் தலைநகராகிய வில்னு என்ற பட்டணத்தில் இரு குருமாரும் அவர்களுடைய சில தோழர்களும் கட்டிடப் பொருள்கள், புடவைகள், டொலர் முதலியவற்றை அமெரிக்காவிலிருந்து கள்ளமாகப் பெற்று நிதிதிரட்டியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டால, சென்ற வருடம் ருஷியா தேசத்தில் விதிக்கப்பட்ட சட்டத்தின்படி, மரண தண்டனைக்கும் உள்ளாகக்கூடும்.

கத்தோலிக்க குருமாருடைய நற்பெயரையும் செல்வாக்கையும் கெடுத்து மக்கள் அவர்கள்மேல் அவநம்பிக்கை கொள்ளும்படி கொம்யூனிஸ்ட் அரசாங்கத்தாரால் ஆயத்தம செய்யப்பட்ட ஒரு சதித்திட்டம் இது என்று அவதானிகள் நம்புகிறார்கள். ஏனெனில், ருஷியாவின் ஆட்சிக்குட்பட்ட ஐரோப்பிய பாகங்களுள் லித்துவேனியா தேசத்தில் மட்டுமே கத்தோலிக்க திருச்சபை ஒரு தனிச் சமூகமாக இன்னும் இயங்கிவருகின்றது. "லித்துவேனியாவில் விசுவாசம் இன்னும் அழிந்துபோகவில்லை. பொதுப்படக் கூறின் அது இன்னும் ஒரு கத்தோலிக்க நாடாகவே காட்சியளிக்கின்றது" என்று **ரோமன் அவதானி** என்ற வத்திக்கான் தினத்தாள் அண்மையில் குறிப்பிட்டுள்ளது.

## பிரத்தியட்சத். பின்வரும் 6-ம ஞாயிறு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பூரணகருத்தையும் நாம் உணருவோமாக. ஏனெனில்,எம்மை உறவுபடுத்தும நற்கருணைச் செபத்தில்தான், அமைதி மன்றாட்டிலும், உட்கொண்டபின் செபத்திலும் காணப்படும். பரிசுத்தப்படுத்துதல், புதுப்பித்தல், ஆளுதல் காத்தல், பசிகொண்டிருத்தல, சீவித்தல் ஆகிய வினைப்பதங்களின் கருத்துத் தெளிவாகும்.

## பேசும் பேனா

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வித எச்சரிக்கையொன்று எம்முடனிருப்பது எமது முகவரியைத் தெரிவிக்கவும், நமக்குஉதவிக்கு வருவோர், எமது ஆன்மீக ஈறுாந்த கடமைகளுக்கு ஆவனசெய்யவும் உதவுமல்லவா?

* * *

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான அர்ச். யூதா ததேயுவை எமது நேயர்கள் அறிந்திருக்கக்கூடும். இவ் அப்போஸ்தலரின் பெயரால் மட்டக்களப்புப் பகுதியில் ஒரு யாத்திரைத்தலம் அமைக்கப்பட்டுளது. இத்தலத்தில் பிரதி வெள்ளிக்கிழமையும் மாலை 4-30 மணிதொடக்கம் செபமாலை, பிரார்த்தனை, நவநாள் என்பனவும் தொடர்ந்து பக்தர்களின் கருத்துக்கட்காகப் பலிபூசையும் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன.

இப்பக்தி முயற்சிகளில் நேரடியாகக் கலந்துகொள்ள முடியாதவர்கள்,

வண. நிர்வாகக் குரு,<br>
புனித யூதா ததேயு க்ஷேத்திரம்,<br>
தேற்றாத்தீவு,<br>
**களுவாஞ்சிக்குடி.**

என்ற முகவரிக்கு விண்ணப்பித்தால் இப்பக்திபற்றிய சகல விபரங்களும் அனுப்பிவைக்கப்படும்.

## கையை உயர்த்துங்கள்

சென்ற சில மாதங்களாகப் பரிசுத்த தந்தை 23-ம் அருளப்பர் திருச்சபையின் ஆட்சிக்குரிய திருச்சங்கங்களின் அல்லது பொதுச்சங்க ஆயத்தக்குழுக்களின் காரியாலயங்களைத் தரிசிக்கும் போதெல்லாம் அங்கு தொண்டாற்றும் ஊழியர்களை விழித்து, "உங்களுள் யார், யார் இத்தாலியர். யார், யார் இஸ்பானியர்? யார், யார் பிரான்சியர்? யார், யார் ஜேர்மனியர்? யார், யார் அமெரிக்கர்? யார், யார் ஆங்கிலேயர்? கையை உயர்த்திக் காட்டுங்கள்" என்று கேட்டுவருகின்றார். இது வத்திக்கான் வட்டாரங்களில் ஒரு பரபரப்பை உண்டுபண்ணியுள்ளது. வத்திக்கான் காரியாலயங்களிலும் சங்கங்களிலும் பல்வேறு நாடுகளிலிருந்து செயலாளர்கள் அதிகமதிகம் சேர்க்கப்படவேண்டுமென்று அகில உலக மேற்றிராணிமார்கள் பாப்பரசருக்கு விண்ணப்பித்துள்ளபடியால்தான், தகுந்தமுறையில் மாற்றங்கள் செய்யும்பொருட்டுப் பாப்பரசர் மேற்கூறியவாறு நடந்துகொள்ளுகிறார் என்று கருதப்படுகின்றது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday Fedruary 11-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org